

கவர்னர்
ஆளுமையில் ஒன்றியம்
கடமை
களம் புக வாரீர்!

களம் புக வாரீர்!

தலைவர் கலைஞர்

வெளியீடு

தி. மு. க. இளைஞர் அணி

அன்பகம்

சென்னை-600 018.

முதற்பதிப்பு : ஏப்ரல் 1993

விலை : ரூ. 4/-

அச்சிட்டோர் :

நியு ரெட்சன் பிரிண்டர்ஸ்,
19/1, முசபர் ஜங் பகதூர் தெரு,
சென்னை-600 005. தொலைபேசி : 84 62 66

இந்நூல் . . .

1998 மார்ச் 26, 27, 28 தேதிகளில் கோவையில் நடைபெற்ற தி. மு. கழக 7-வது மாநில மாநாடு மற்றும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையினையும், மூரசொலிவாயிலாக ஏப்ரல் 1, 2 தேதிகளில் உடன்பிறப்புக்கு தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய ''கொள்ளுப்பாட்டிகளும் பாட்டன்களும் தூக்கிய கொடி'' என்ற கடிதத்தையும், தமிழ்மொழி காத்திட 1938-ஆம் ஆண்டு நடைபெற்ற அறப்போர் பட்டியலையும் அந்த படை வரிசையையும் நினைவூட்டி ''புறப்படட்டும்; புறநானூற்று மகளிர் பட்டாளம்!'' என அழைப்பு விடுத்துள்ள கடிதத்தையும் தி. மு. க. இளைஞர் அணி சார்பில் இந்நூல் வடிவில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

- தி. மு. க. இளைஞர் அணி

களம் புக வாரீர்!

கோவையில் தி.மு.கழகத்தின் ஏழாவது மாநில மாநாடும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் நடைபெற்றது. மாநாட்டின் மூன்றாம் நாள் (28.3.93) தலைவர் கலைஞர் அவர்கள் மாநாட்டு தலைமை உரை ஆற்றினார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

கடந்த மூன்று நாட்களாக பொதுக்குழுவில் தொடங்கி பேரணி என்று தொடர்ந்து நேற்றைய தினம் நம்முடைய கழகத்தின் வீறுகொண்ட சொற்பொழிவாளர்களின் கருத்துரைகளும், திராவிட இயக்க முன்னோடிகளுடைய படத்திறப்பு விழாக்களும் நிறைவுற்று நேற்று இரவு மாநாட்டின் திறப்பு ரையா அல்லது குற்றால அருவியா என்று எண்ணத்தக்க அளவுக்கு சமுதாயக் கருத்துக்களை இன உணர்வுக்குத் தேவையான கருத்துக்களை, மொழியைக் காப்பாற்றுவதற்குத் தேவையான படைக்கலன்களை இனமானப் பேராசிரியர் அவர்கள் வாரி, வாரி வழங்கி இன்று காலை முதல் கழகத்தினுடைய முன்னணித் தளபதிகள் நண்பர் ப.உ.ச. எடுத்துக் காட்டியதைப் போல இடி முழக்கங்களாய் - சூறாவளிகளாய் - சுழன்று அடிக்கும் புயற்காற்றாய் அதே நேரத்தில் வீரம் நிறைந்த - விவேகம் மிக்க கருத்துக்களை அள்ளி அள்ளித் தந்து இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் தலைவன் என்கிற முறையில் தலைமைப் பேருரை என்று ஆசையின் காரணமாக வரவேற்புக்குழுவினர் அழைப்பிதழிலே அச்சிட்டு இருந்தாலும் கூட நிறைவுரையாக - இந்த மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாட்டின் கருத்துக்களின் தொகுப்புரையாக - பொதுக்குழுவிலும், நேற்று இரவு நடைபெற்ற கழகத்தின் நிர்வாகக்குழுவிலும் விவாதித்து எடுத்த முடிவுகளை அறிவிக்கின்ற அரிய வாய்ப்பினைப் பெற்று அதற்கிடையில் சில கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பினையும் நான் உருவாக்கிக் கொண்டு உங்கள் முன்னால் நின்று கொண்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக்கழகம்
ஜனநாயகப் பேரியக்கம்

கழகம், ஜனநாயகப் பேரியக்கம், தி.மு.கழகத்தின் கட்சி அமைப்புகள் பொதுத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளாகும். உறுப்பினர்கள் சேர்த்து கிளைக்கழகச் செயலாளர்களுடைய தேர்தல், நிர்வாகிகளுடைய தேர்தல் நடைபெற்று முடிந்து, அங்கிருந்து வருகின்ற பிரதிநிதிகளைக் கொண்டு ஒன்றிய கழகங்களை உருவாக்குவதால், அங்கிருந்து வருகின்ற பிரதிநிதிகளைக் கொண்டு மாவட்டக் கழக நிர்வாக அமைப்புகளை உருவாக்குதல், தலைமை செயற்குழு உறுப்பினர்களும் கழகத்தின் தலைவரை, பொதுச் செயலாளரை, பொருளாளரைத் தேர்ந்தெடுத்தல் பின்னர் துணைப் பொதுச் செயலாளர், தலைமைக் கழகத்தின் செயலாளர்கள் என்ற நியமனங்கள் நடைபெறுதல் இவைகள் எல்லாம் நடைபெற்ற பிறகு மாநில மாநாட்டினை நடத்துதல், அந்தமாநாட்டை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராகிய நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளரும், மற்றும் துணைப் பொதுச் செயலாளரும் எங்களுக்கு நடை பெறுகின்ற ஒரு மகுடாபிஷேகமாக கருதி அமைச்சர்களாக ஆவதை விட, அதிகாரத்தைப் பெறுவதை விட, ஆட்சிப் பொறுப்பில் அமருவதை விட பெரிய வாய்ப்பாக - பாக்கியமாக எண்ணி இங்கே நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒவ்வொருவராக முன்மொழிந்து, வழிமொழிந்து, கைத்தறி ஆடைகளை அணிவித்து, நீண்டநேரம் பேசாவிட்டாலும், அவர்களுக்கும் எனக்கும் உள்ள உறவை எடுத்துச் சொல்லி பாசமழை பொழிந்தார்களே! இதற்குப் பெயர்தான் திராவிட முன்னேற்றக் கழகம் (பலத்த கைத்தட்டல்).

இது ஒரு அரசியல் பேரியக்கம். சமுதாய மறுமலர்ச்சி இயக்கம். ஒரு குடும்ப பாசம் உள்ள இயக்கம். நேற்றைக்கு பொதுச் செயலாளர் பேராசிரியர் தன்னுடைய ஆணித்தரமான அழகான, தெள்ளிய, தேன்பாகு எனத்தக்க கருத்துக்களை

எல்லாம் எடுத்துச் சொல்லுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட் டார்கள். தி.மு. கழகத்திற்கு கலைஞரை விட்டால் வேறு தலைமை இல்லை. கலைஞருக்குப் பிறகு இந்தக் கழகத்திற்கு யாரும் இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

நான் அவர்களுடைய வார்த்தைகளுக்கு திருத்தம் சொல்வ தாக கருதக்கூடாது.

இலட்சக்கணக்கான தம்பிகள் உண்டு

இந்த இயக்கத்திலே எனக்கு ஏராளமான தம்பிமார்கள் உண்டு. ஒவ்வொரு தம்பியும் ஒவ்வொரு ஆற்றலைப் பெற்ற வர்கள். பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், வீறு கொண்டவர்கள் செயல்வீரர்கள். தியாகச் செம்மல்கள், சித்ரவதைகளை சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொள்கிற தம்பிமார்களும் உண்டு.

அப்படி இலட்சக்கணக்கான தம்பிமார்களை நான் பெற்று இருக்கின்றேன். என்னுடைய குடும்பத்திலே கூட எனக்கு இரண்டு சகோதரிகள் தான் உண்டு. எனக்கு ஒரு அண்ணன் இல்லை. அந்த அண்ணன் இல்லாத குறையை பேராசிரியர் அன்பழகனார் தான் போக்கி வருகிறார் என்பதை நான் உணர்ந்து அவரோடு இணைந்து இந்தக் கழகத்தை நடத்திக் கொண்டு இருப்பவன்.

எனவே அவர் சொல்லுக்கு மாற்றுச் சொல் கூறுவதாக அவரும் கருதக்கூடாது. நீங்களும் கருத மாட்டீர்கள் என்றே நம்புகின்றேன்.

கருணாநிதிக்குப் பிறகு தி.மு. கழகத்தை வழி நடத்திச் செல்ல - தலைமை ஏற்றுச் செல்ல யாரும் இல்லை என்று அவர் சொன் னது. என்னைப் புகழ்ந்து மேலும் என்னிடத்திலே வேலை வாங்க அவர் கையாண்ட தந்திரமே தவிர; அதுதான் உண்மை என்று ஒத்துக்கொள்ள நான்தயாராக இல்லை.

நானும் பேராசிரியரும், சாதிக்கும், நாஞ்சிலாரும் தலைமைப் பொறுப்பிலே இருக்கின்ற கழக முன்னோடிகளும் எத்தனையோ தம்பிமார்களை உருவாக்கி இருக்கின்றோம்.

தி.மு. கழகம் என்கின்ற இந்த அரசியல் குடும்பம் அரசாங்கத்தில் இன்றைக்கு பிரச்சாரம் செய்யப்படுகின்ற குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்கு உட்பட்டது அல்ல. அரசாங்கத்தின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் நாம் இருவர் நமக்கு இருவர்.

நாம் இருவர்:
நமக்கு பல்லாயிரவர்!

நாம் இருவர் நமக்கு ஒருவர். நாம் இருவர் நமக்கு எதற்கு ஒருவர் என்கிற அளவுக்கு விரிவடைந்துள்ள திட்டம் - அரசாங்கத்தினுடைய குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம். ஆனால் இது குடும்பம் என்றாலும் கூட ஜனநாயகக் குடும்பம். இங்கே நாம் இருவர், நமக்கு பல்லாயிரம் பேர் என்கின்ற அளவுக்கு தம்பிமார்கள் இருக்கிறார்கள். அண்ணாவிற்குப் பிறகு, யார் என்று இந்தக் கழகம் வாழக்கூடாது என்று எண்ணியவர்கள் கருதினார்கள். ஆனால் இதை ஜனநாயக பேரியக்கமாக அண்ணா வளர்த்த காரணத்தினால் இன்றைக்கு நானும் பேராசிரியரும், தி.மு.கழக உடன் பிறப்புக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு வழி காட்டச் சொல்லி அவர்களால் ஆணையிடப்பட்டு இந்த இயக்கத்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம்
சங்கர மடம் அல்ல

அண்மையில் சென்னை மாநகரில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் இருந்து பிரசித்திப் பெற்ற பத்திரிகையாளரான ஒரு பெண்மணி வந்து என்னை சந்தித்தார். அப்போது என்னிடத்தில் அந்த அம்மையார், இப்பொழுது தமிழ்

நாட்டிலே கிசு கிசுக் கப்படுகின்ற தி.மு.கழகத்திற்கு எதிரான சதியாக செய்யப்படுகின்ற ஒரு வதந்தியை வைத்துக் கொண்டு கேட்டார்.

'உங்களுக்குப் பிறகு யாரை நியமிக்க இருக்கிறீர்கள்' என்று கேட்டார்.

நான் உடனடியாக பதில் சொன்னேன். தி.மு.கழகம் சங்கர மடம் அல்ல. (பலத்த கை தட்டல்) எனக்குப் பிறகு இந்த ஆதீனகர்த்தர் பெரியவர், நடுவர், சின்னவர் என்று எல்லாம் நியமிப்பதற்கு தி.மு.கழகம் சங்கரமடம் அல்ல என்று சொன் னேன்.

அது சங்கராச்சாரியாரை இழிவுபடுத்துவதற்காக சொல்லப் பட்ட வார்த்தை அல்ல. நிலைமையை விளக்குவதற்காக சொல்லப்பட்ட வார்த்தை. எனவே இந்த ஜனநாயக இயக்கத் திலே எனக்குப் பிறகும், பேராசிரியர், சாதிக், நாஞ்சிலாருக் குப் பிறகும் இங்கே இருக்கிற கழக முன்னோடிகளுக்குப் பிறகும் இந்தக் கழகத்தை வளர்க்க ஆட்கள் இருக்கிறார்கள் என்றால்தான் நமக்குப் பெருமை. இல்லாவிட்டால் இவர்க ளோடு ஒழித்துவிட்டுப் போய்விட்டார்கள் தி.மு.கழகத்தை என்று எதிர்காலம் சபிக்கும்.

விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா சொன்னார். 'தி.மு.க ழகம் ஆட்சிக்கு வந்தாலும், வராவிட்டாலும் தமிழ்நாட்டினு டைய கலை, கலாச்சாரம், நாகரிகம் வரலாற்றுப் பெருமை, இலக்கியம் தமிழர்களுடைய உரிமைகள் இவைகளை காப் பாற்றுவதற்காக தி.மு.கழகத்தினுடைய சேவை இன்னும் 50 ஆண்டு காலத்திற்கு வேண்டும்' என்று அண்ணா சொன்னார்.

நான் நேற்றைக்கு வரவேற்புக்குழுத் தலைவர் அருமை நண்பர் கண்ணப்பன் குறிப்பிட்டதைப் போல, ஐம்பது ஆண்டு காலத்திற்குத் தேவை என்று அண்ணா சொன்னார் களே, ஆனால் கடந்த காலத்தில் நடைபெற்ற ஒரு பத்து

பதினைந்து ஆண்டு கால ஆட்சியின் காரணமாக அண்ணா சொன்ன அந்த ஐம்பது ஆண்டுகாலம் அண்ணா சொன்ன அந்த ஐம்பது ஆண்டுகாலம் முன்னோக்கிச் செல்லாமல், பின்னோக்கிப் போய் இன்னும் நூறாண்டு காலத்திற்கும் மேலாக தி.மு.கழகத்தின் பணி இந்தச் சமுதாயத்திற்கு தேவைப்படுகிறது. எனவேதான் அந்த உண்மையை உணர்ந்து இருக்கிற காரணத்தால்தான் நாங்கள் உங்களை அழைத்து இந்த மாபெரும் மைதானத்தில் மாநில மாநாட்டைக் கூட்டி உங்களை எல்லாம் காணுகின்ற வாய்ப்பை பெற்று இருக்கின் றோம்.

பயமுறுத்தல் - மிரட்டல்களை
எல்லாம் மீறி மாநாடு
நடைபெறுகிறது

இந்த மாநாட்டை நடத்தவேண்டும் என்று எண்ணி அதைச் செயல்படுத்த நிர்வாகக்குழுவை, செயற்குழுவைச் கூட்டி, பொதுக் குழுவின் கருத்தறிந்து கோவையிலே இந்த மாநாட்டை நடத்துவது என்று தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இடையிலே பெருமளவு நேரமின்றி மிகக் குறுகிய காலத்திலேதான் இந்த மாநாட்டை நடத்துவதற் காக சிந்தித்து நாங்கள் செயல்பட்டு இருக்கின்றோம்.

இங்கே மாநாட்டின் செயலாளர்களிலே ஒருவரான நண்பர் சி.டி. தண்டபாணி குறிப்பிட்டதைப்போல, நிதிக்குழுத்தலை வர் திருப்பூர் துரைசாமி குறிப்பிட்டதைப் போல முதலில் மாநாடு நடத்துவதற்கான இடம் கோவை நகருக்கு அருகில் கிடைப்பதே அரிதாக இருந்தது. எவ்வளவோ சிரமத்திற்கு இடையே இந்த இடம் கிடைத்தது. எவ்வளவோ பயமுறுத் தல் - அச்சுறுத்தல் - மிரட்டல் இவைகளை எல்லாம் மீறித்தான் இந்த இடத்தை நாம் பெற்றோம்.

இந்த இடத்திலே நாம் மாநாடு நடத்தப் போகிறோம் என்று மகிழ்ச்சியோடு எல்லா ஏற்பாடுகளையும் செய்து மாநாட்டுப்

பந்தலை - அதன் எழிலை எழுச்சியை காலையிலே பார்க்கப் போகிறோம் என்ற தணியாத ஆசையோடு திருச்சியில் அன்பிலினுடைய படத்திறப்பு விழாவிற்கு சென்ற பொழுது மேடையிலே இருந்த எங்களிடத்திலே மாநாட்டுப் பந்தல் எரிந்து கொண்டிருக்கிறது என்ற சீட்டு தரப்பட்டது.

அன்பிலை இழந்த வேதனையில் நெஞ்சம் எரிந்து கொண்டி ருக்கும் பொழுது அதோடு சேர்ந்து இந்த மாநாட்டுப் பந்தலும் எரிகிறதா ?

இந்தச் செய்தியை கேள்விப்பட்டவுடன் பக்கத்திலே அமர்ந் திருந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் என்ன வென்று கேட்டார். அவருக்கும் செய்தி சொல்லப்பட்டது. ஏறத்தாழ 95 ஆண்டுகளைக் கடந்த விசுவநாதம் மேடையிலே பேசும் பொழுது ''தி.மு.க. மாநாட்டுப் பந்தலிலே தீ வைத்து இருக்கிறார்கள். போதாத காலம் அவர்களுக்கு. நான் வயதான வன் சொல்கிறேன். அவர்கள் அழியப்போகிறார்கள்'' - என்று சொன்னார். யார் குற்றவாளி என்பதை நாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்து - கைது செய்யப்பட்டதை வைத்து சொல்லியிருக்கிறோம்.

போலீஸ் கமிஷனர் பேட்டியில் உள்ள குறைபாடுகள்

நம்முடைய நாஞ்சிலார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல போலீஸ் கமிஷனருடைய பேட்டியில் இருக்கிற குறைபாடுக ளைச் சுட்டிக் காட்டி சொல்லியிருக்கிறோம். ஆனால் அவ்வ ளவு வயதான, மூத்த, அந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் இதே வார்த்தையை மனம் நொந்து சொன்னார். கண்களிலே நீர் பொங்கச் சொன்னார். ஏனென் றால் நீதிக்கட்சித் காலத்திலிருந்து இந்த இயக்கத்தை தொடர்ந்து வளர்த்தவர் அல்லவா அவர்! அவர் கண் முன்னே வளர்ந்தவர்கள் அல்லவா நாங்கள்! அவருடைய தமிழ் முழக்கம் கேட்டு தமிழைக் காப்பாற்ற களம் கண்டவர்கள்

அல்லவா நாங்கள்! எனவே எங்களுடைய முயற்சிக்கு ஒரு ஊனம் ஏற்பட்டது; ஒரு எதிர்ப்பு ஏற்பட்டது; அது நெருப்பிடு கின்ற அளவிற்கு ஏற்பட்டது என்று கேள்விப்பட்ட உடனே கண்கலங்கி அவ்வளவு ஆத்திரத்துடன் அந்த வார்த்தையைச் சொன்னார்.

முற்றிலும் எரிக்கப்பட்டாலும் கூட
வெட்ட வெளியில் மாநாடு நடக்கும்

மாநாட்டுப் பந்தலை - எனக்கு முன்னே பேராசிரியரும் மற்றவர்களும் இங்கே வந்து பார்த்தார்கள். திருச்சியிலே இருந்த என்னோடு சி.டி. தண்டபாணி. செ.குப்புசாமி, கோவை மு. இராமநாதன், தம்பி வை. கோபால்சாமி இவர்கள் எல்லாம் தொடர்பு கொண்டு பேசினார்கள். என்ன செய்வது என்று கேட்டார்கள். நான் பந்தல் எவ்வளவு எரிந்து இருக்கிறது என்பதைப் பற்றிக்கூட கவலைப்படாமல் முழுவ துமே எரிந்திருந்தாலும்கூட வெட்ட வெளியில் மாநாடு நடக்கும் (பலத்த கை தட்டல்) திட்டமிட்டபடி பேரணி நடைபெற்றே தீரும் என்று நீங்களும் அறிவித்து விடுங்கள் நானும் அறிவித்து விடுகிறேன். பேராசிரியரிடத்திலும் சொல்லி விடுங்கள் என்று கூறி விட்டு நேராக மாநாட்டுப் பந்தலுக்குத்தான் வந்தேன்.

மாநாட்டுப் பந்தலினுடைய ஒரு பகுதி எரிந்து கருகி சாம்பலாகிக் கிடந்தது. பதினோராம் தேதி கோவைக்கு வந்திருந்தபொழுதுநாம் கண்ட பந்தல் தானா என்று எண்ணு கின்ற அளவிற்கு மாநாட்டுப் பந்தல் தீ வைத்து எரிக்கப்பட்டி ருந்தது.

36 மணி நேரத்தில் தி.மு. கழகத்தின் செயல் வீரர்கள். அடலேறுகள் என்னுடைய வேண்டுகோளை ஆணையாக ஏற்றுக் கொண்டு கண்ணப்பனுடைய தலைமையில் சி.டி. தண்டபாணியினுடைய மேற்பார்வையில் தம்பி கோவை இராமநாதனுடைய முயற்சியில் மற்ற மாநாட்டுச் செயலாளர்

களின் முயற்சியில் மறுபடியும் இந்த மாநாட்டுப் பந்தலை முழுமையான பந்தலாக அமைத்தார்கள் (பலத்த கைதட்டல்) என்றால் இந்த மாநாட்டுப் பந்தலைப் பார்த்துப் பார்த்து நான் பூரிப்படைகிறேன்.

1991 ஆம் ஆண்டு தி.மு.கழகம் எனும் பந்தலே எரிக்கப்பட்டது. இங்கு மாநாட்டுப்பந்தல் எரிக்கப்பட்டது. இந்தப் பந்தல் சீர்படுத்தப்பட்டு மாநாடு நடைபெறுகிறது.

1991 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இராஜீவ் காந்தியின் கொலையைப் பயன்படுத்தி, வீண் பழி சுமத்தி தி.மு.கழகம் எனும் பந்தலே எரிக்கப்பட்டது. அந்தப் பந்தல் சீர் செய்யப் பட்டு இன்றைக்கு தமிழ் மக்களுடைய ஆதரவோடு இயங்கிக் கொண்டு இருக்கிறது.

திரும்பிப் பார்க்கும் இடங்கள்
எல்லாம் தலைகள்! தலைகள்!

அதன் அடையாளம் தான் நான் திரும்பி பார்க்கிற இடங்கள் எல்லாம் தலைகள், தலைகள், தலைகள்தான்.

அந்தத் தலைகளிலே அறிவுச் சுடர்கள் - சுடர்கள் சுடர்கள் (பலத்த கை தட்டல்) அந்தத் தலைகளுக்குச் சொந்தக்காரர்க ளின் இதயம் எல்லாம் அன்பு மழை, தமிழ் மழை, இன்ப மழை, இலட்சிய மழை. (பலத்த கை தட்டல்).

அழைப்பை ஆணையாக
ஏற்றீர்கள்

நண்பர்கள் சொன்னதைப்போல நான்கே கடிதங்கள்தான் எழுதினேன். உடன்பிறப்பே, உனக்குநான் கடிதம் எழுதும் போது எல்லாம், என்ன காரணமோ தெரியவில்லை. வேறு கட்டுரைகள், கடிதங்கள் எழுதும் போது எல்லாம் இல்லாத ஒரு உணர்வு. ஒரு காதலி காதலனுக்கு எழுதும்போது எவ்வளவு இன்ப உணர்வு ஏற்படுகின்றதோ, அந்த இன்ப உணர்வோடுதான் எழுதுகின்றேன்.

அதனால்தான் நானே எண்ணிடாத சொற்கள் எல்லாம் என்னையும் மீறி எனக்கு முன்பாக பேனா குனிந்து, நர்த்தனம் ஆடி கடிதங்களாக வெளி வந்தன. அந்தக் கடிதங்களில் நான் உங்களுக்கு வேண்டுகோளாக விடுத்தேன். ஆனால் அதை நீங்கள் கட்டளையாக ஏற்றீர்கள். அழைப்பாகத்தான் விடுத் தேன். ஆனால் நீங்கள் அதை ஆணையாக ஏற்றீர்கள்.

இந்தப் பேரணிக்கு ஈடு இணை யாரால் செல்ல முடியும்?

அதன் விளைவு பந்தல் எரிந்து விழுந்த செய்தி வானொலி யில், தொலைக்காட்சியில் சொல்லப்பட்ட பிறகும் காலை பத்திரிகையில் செய்தி பரப்பப்பட்ட பிறகும் - இது உண்மை தானா? இது உண்மை தானா? என்று நம்முடைய கழக உடன் பிறப்புக்கள், தமிழகம் முழுவதும் உள்ளவர்கள், கேட்டு பந்தல் எரிக்கப்பட்டது உண்மைதான் என்று தெரிந்த நீ கோவை நகரம் குலுங்க நடத்தினீர்களே; பேரணி அந்தப் பேரணிக்கு ஈடு இணைச் சொல்ல யாரால் இயலும்?

உவமை சொல்ல என்னால் முடியவில்லை!

நேற்றைக்கு பேராசிரியர் சொன்னாரே. என்னால் உவமை சொல்ல முடியவில்லை. நாளை கலைஞர் முயன்று பார்க் கட்டும் என்றாரே;

பேராசிரியர் அவர்களே! தோற்றுப் போய் விட்டேன் நான். என்னால் உவமை சொல்ல முடியவில்லை. அந்த அளவிற்கு ஒரு பேரணியை தி.மு.கழகம் 26-ஆம் தேதி மாலை நடத்திக் காட்டி இருக்கின்றது. பேரணியிலே சில மணி நேரம் மழைத்துளிகளும் பன்னீர் போல தெளிக்கப்பட்டது.

ஆறுதலுக்காக வானம் பன்னீர் தெளித்தது

பந்தல் எரிந்தது என்கின்ற வேதனையில் நடந்து வந்து கொண்டு இருந்த எனது உடன்பிறப்புகளுக்கு ஆறுதலாக வானம் பன்னீர் தெளித்தது. (பலத்த கை தட்டல்).

நான்கு மணிக்கு பேரணி புறப்பட்டது. பேரணியைப் பார்க்க அமைக்கப்பட்ட மேடையில் நாங்கள் அமரும்போது மாலை நான்கரை மணி. இரவு ஒன்றரை மணி வரையிலே பேரணி முடியவில்லை. பிறகுதான் தூங்கச் சென்றோம். அதற்குப் பிறகும் பேரணி நடைபெற்றதாகச் செய்தி வந்தது. நான் எப்படி உன்னைப் பாராட்டுவேன். எப்படி உனக்கு நன்றிகூறுவேன். உன் கைகளை எடுத்து கன்னத்தில் ஒத்திக் கொள்வதா அல்லது குனிந்து நீ நடந்து வந்த கால்களுக்கு முத்தமிடுவதா (பலத்த கை தட்டல்) தோற்றுப் போன இயக்கம் மீண்டும் தோள்தட்டிப் புறப்படுவதற்கு உன்னு டைய தொண்டினை, உன்னுடைய உழைப்பினை, வியர்வை யினை, உன்னுடைய இரத்தத்தை, கண்ணீரை, எந்த அளவுக்கு சிந்தி இருக்கிறாய்; இன்னமும் சிந்திக்கொண்டு இருக்கிறாய் என்பதற்கு அடையாளம் அல்லவா அந்தப் பேரணி!

அந்தப் பேரணியைத் தொடர்ந்து நடைபெறுகின்ற இந்த மாநாட்டினுடைய சிறப்புகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போல் நம்முடைய வரவேற்புக் குழுத் தலைவர் கண்ணப்ப னின் பணிகள் அமைந்து இருக்கின்றன. அவருக்கு மாநாட்டு வேலைகள் தொடங்கியவுடன் அம்மை நோய் கண்டு அவதிப் பட்டார் என்றாலும்கூட வீட்டில் இருந்தவாறு கழகத் தோழர் களை எப்படி எல்லாம் உற்சாகப்படுத்தினார் என்பதையும், எந்த அளவிற்குப் பணியாற்றினார் என்பதையும் நீங்களும் அறிவீர்கள்; நானும் அறிவேன்.

மாநாட்டுப் பணி
கண்டு மகிழ்கிறேன்

செயலாளர்கள் சி.டி. தண்டபாணி, தம்பி இராமநாதன், தம்பி விடுதலை விரும்பி, பெரியார் மாவட்டச் செயலாளர் தம்பி கணேசமூர்த்தி, நீலகிரி மாவட்டச் செயலாளர் தம்பி முபாரக், தம்பி, க.ரா. சுப்பையன் ஆகியோரும் துணைச் செயலாளர்கள் ஆர்.டி. மாரியப்பன், மாதையன், சி. இரத்தினசாமி, ஆகியோரும், நிதிக்குழுத்தலைவர் தம்பி சு. துரைசாமி இதற்கிடையே பல்வேறு குழுக்கள் இருந்தாலும் கூட பொங்கலூர் பழனிச்சாமி போன்றவர்களும் எந்த அளவிற்கு பணியாற்றினார்கள் என்பதை எல்லாம் நான் அறிந்து மகிழ்கிறேன்.

தொண்டர் படைத் தலைவராக பசுபதியும், துணைத் தலைவர்களாக கிருஷ்ணசாமி, செல்வராஜ், இரா. பாலு, இராசேந்திரன், சந்திரசேகரன், பெரியசாமி, நிஜாமுதீன் ஆகியோரும் ஆற்றி உள்ள அரும் பணிகள் அளவிட முடியாத அளவிற்கு புகழத்தக்கவை. அந்த அளவு அரும்பணி ஆற்றி இருக்கிறார்கள்.

அதைப் போலவே மகளிர் தொண்டர் அணித்தலைவர் சுலக்சனா, துணைத்தலைவர்கள் சிந்தாமணி, ஈசுவரி இராதாகிருட்டிணன், இரத்தினாசாமி நாதன், மணியம்மை ஆகியோர் உட்பட மகளிர் தொண்டர் அணியினர் வேறு எந்த மாநாட்டிலும் இல்லாத அளவிற்கு மிகச்சிறப்பாக பணியாற்றினார்கள் என்று பத்திரிகைகள் எல்லாம் கூட மகளிர் அணி தொண்டர்களுடைய பணியை பாராட்டி எழுதி இருப்பதைப் பார்த்து நான் பரவசம் அடைந்தேன்.

தலைமைக் கழகத்தின் சார்பில்
வணக்கம், பாராட்டு, வாழ்த்து !

மாநாட்டுப் பொறுப்பாளராக தம்புராஜ், துணை பொறுப்பாளர்களாக மாசிலாமணி, கோவை சம்பத், காட்டூர் இராம

மூர்த்தி மற்றும் நிதிக்குழு, தீர்மானக்குழு, பந்தல் குழு, மேடைக்குழு, உபசரிப்புக்குழு, விளம்பரக்குழு, ஊர்வலக் குழு இவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் ஆற்றி யுள்ள அரும்பணிகளுக்கு எல்லாம் தலைமைக் கழகத்தின் சார் பாக தலை தாழ்ந்த வணக்கத்தை பாராட்டுகளை வாழ்த்துக் களை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது ஏழாவது மாநில மாநாடு, 1951-ஆம் ஆண்டு டிசம்பர் 13,14,15,16 ஆகிய நாட்களில் கழகத்தின் முதல் மாநில மாநாடு சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் அண்ணா அவர்களின் தலை மையில் கே.கே. நீலமேகம், அவர்கள் திறப்பாளராக இருந்து நடைபெற்ற மாநாடு. அந்த மாநாட்டிலே கழக நிதியாக வழங் கப்பட்டது 30 ஆயிரம் ரூபாய்.

1956-ஆம் ஆண்டு மே திங்கள் 17,18,19,20 ஆகிய நான்கு நாட்கள் திருச்சியில் அன்பில் முன்னின்று நடத்திய மாநாடு. மாநாட்டுத் தலைவர் நாவலர். திறப்பாளர் சேலத்துப் பெரிய வர் ஜி.பி. சோமசுந்தரம். அங்கே நிதியாக வழங்கப்பட்டது ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய்.

1961-ஆம் ஆண்டு ஜூலை 13,14,15,16 ஆகிய தேதிகளில் மதுரையில் நடைபெற்ற மாநில மாநாடு மூன்றாவது மாநாடு. தலைவர் அண்ணா, திறப்பாளர் கே.ஏ.மதியழகன். அந்த மாநாட்டில் கழக நிதியாக வழங்கப்பட்டது ஒரு இலட்சம் ரூபாய்.

1966- டிசம்பர் 29,30,31 1967 ஜனவரி 1 ஆகிய நான்கு நாட்கள் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற மாநில மாநாடு நான்காவது மாநாடு - தலைவர் அண்ணா. திறப்பாளர் நான். கழக நிதியாக வழங்கப்பட்டது ரூ.11 இலட்சம்.

1975 டிசம்பர் மாதம் 25,26,27,28 ஆகிய தேதிகளில் மாநில மாநாடு கோவையில் நடைபெற்றது. மாநாட்டுக்குத் தலைவர் நான். திறப்பாளர் நாவலர். அந்த மாநாட்டில் 10 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கழக நிதியாக வழங்கப்பட்டது.

1990-பிப்ரவரி 9,10,11 ஆகிய நாட்களில் திருச்சியில் நடை பெற்றது. ஆறாவது மாநில மாநாடு மாநாட்டுத் தலைவர் நான். திறப்பாளர் பேராசிரியர் அப்பொழுது அந்த மாநாட்டில் கழக நிதியாக வழங்கப்பட்டது 23 இலட்சத்து 15 ஆயிரத்து 414 ரூபாய்.

கோவை மாநாட்டில்
ரூ.31 இலட்சம் நிதி

இப்பொழுது 93-ல் ஏழாவது மாநில மாநாடு. அதோடுவிட் டால்; எவ்வளவு நிதி வழங்கப்படும் என்று என்னை கேட்கா மல் விடுவீர்களா ? எனவே நுழைவுக் கட்டணம், நன்கொடைச் சீட்டுக்களின் மூலம் வரவு 86 இலட்ச ரூபாய் (பலத்த கை தட்டல்)

அவ்வளவும் மிச்சம் என்று கருதிவிடாதீர்கள் மாநாட்டுச்செ லவு வழக்கத்தைவிட பந்தல் எரிக்கப்பட்ட காரணத்தால். அதிக செலவு ஆகியிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

எரிக்கப்பட்ட பந்தல் இன்சூரன்ஸ் செய்யப்பட்டிருந்தாலும் கூட அந்தப் பணம் வருகிற வரையிலே இந்தச் செலவிற்கு நாம்தான் பொறுப்பேற்க வேண்டும். எனவே மாநாட்டுச் செலவு 55 இலட்ச ரூபாய். கழகத்திற்கு நிதியாக வழங்கப்படு வது 31 இலட்ச ரூபாய் என்பதை நான் பெருமையோடு தெரி வித்துக் கொள்கிறேன் (பலத்த கைத்தட்டல்).

இங்கே உரையாற்றியவர்கள்
நல்ல விளக்கங்களை உங்களுக்குச்
சொல்லியுள்ளார்கள்

முப்பதாயிரம் ரூபாயிலே முதல் மாநாடு 31 இலட்ச ரூபாய் நிதியிலே ஏழாவது மாநில மாநாடு இந்த மாநாட்டில் கருத்து ரைகள், படத்திறப்பு விழாக்கள், இசை நிகழ்ச்சிகள், கலை - நாடக நிகழ்ச்சிகள் இவைகளோடு தீர்மானங்கள், கருத்து விளக் கங்கள் இத்தனையையும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். பல்வேறு

தலைப்புகளில் கருத்துரை ஆற்றியவர்கள் தங்களுக்கே உரிய ஆற்றலை வெளிப்படுத்தி நல்ல பல விளக்கங்களை குழுமியி ருக்கின்ற உங்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார் கள். அந்த விளக்கங்கள் உங்களுக்கு மாத்திரம் அல்ல.

இங்கே குழுமியிருக்கிற பல இலட்சம் மக்களைப் பார்த்து தமிழ் நாடே தி.மு.கழகத்தின் பக்கம் வந்து விட்டதாக நான் கருதிக்கொள்கிற ஏமாளி அல்ல.

ஐந்து கோடி மக்கள் இருக்கிற தமிழ்நாட்டில் இங்கே வந்தி ருக்கிற நீங்களெல்லாம் அந்த ஐந்து கோடி மக்களையும் சந்திக் கின்ற தூதர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

இங்கே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களையெல் லாம், அந்த ஐந்து கோடி மக்களுடைய மனதிலே பதிய வைக் கின்ற தூதர்களாக நீங்கள் செயல்பட்டாக வேண்டும்.

கோவைக்கு வந்தோம், மாநாடு கண்டோம், பேரணியிலே கலந்து கொண்டோம், பேச்சுக்களைக் கேட்டோம். வீரம், தீரம், விவேகம், விளக்கம், இவைகள் அடங்கிய உரைகளுக்கெல் லாம் செவி மடுத்தோம். நம்முடைய சிந்தையிலே மாத்திரம் தேக்கிக் கொண்டோம் என்று இல்லாமல் கொஞ்சம் வள்ளல் தன்மையோடு சிந்தையில் தேக்கிக் கொண்ட கருத்துக்களை சிற்றூர், பேரூர், நகரங்கள் இப்படி எல்லா இடங்களிலும், அங்கிங்கெனாதபடி நீங்கள் பரப்பியாக வேண்டும்.

உங்களை அழைத்திருப்பது, உங்களைத் தூதர்களாக கிராமங் களுக்கும், நகரங்களுக்கும் அனுப்புவதற்காகத்தான் என்பதை மறந்து விடக்கூடாது.

கோட்டையைக் கப்பிக் கொண்டு
இருக்கிற இருள் விலகும்

அந்தப்பணியை நீங்கள் செய்தால்தான் இன்றைக்கு கோட் டையிலே இருக்கிற நாசம் வெளியேறும். இன்று

கோட்டையை கப்பிக் கொண்டிருக்கிற இருள் விலகும். உதய சூரியன் புறப்படுவான். அதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

இன்றைக்கு கோட்டையில் உள்ளவர்களைப் பற்றி இங்கே காலையில் சில பேர் பேசினார்கள். வெற்றி கொண்டானும், நன்னிலம் நடராசனும் வருத்தப்படக்கூடாது. அவர்களிடத் திலே எனக்கு உரிமை உண்டு.

அழகாக, ஆணித்தரமாக மட்டுமல்ல; மற்றவர்களுடைய கண்களையெல்லாம் குளமாக்குகின்ற பேச்சாற்றல் வெற்றி கொண்டானுக்கு உண்டு.

நன்னிலம் நடராசனுக்கு வயிறு குலுங்க சிரிக்கையைக்கின்ற பேச்சாற்றல் உண்டு. ஆனால் இன்று காலையிலே அவர்கள் பேசுவதற்கு கிடைத்த நேரம் குறைவாக இருந்த காரணத் தாலோ என்னவோ இந்த மாநாட்டுப் பந்தலில் அவர்கள் பேசிய பேச்சில் இடையிடையே வந்து போன சில கருத்துக் களை குறிப்பாக தமிழகத்தினுடைய முதமைச்சரைப் பற்றி எடுத்துச் சொன்ன சில கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்ள வில்லை.

அந்தத் தம்பிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்க ளது பேச்சுக்களால் இந்த மாநாட்டுக்கு வந்திருப்பவர்களில் எவருடைய மனமாவது புண்பட்டிருக்குமேயானால் அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்கு நன்மை செய்வதையே
குறிக்கோளாக கொண்ட ஆட்சி!

நன்னிலம் நடராசன் பேசும்பொழுது, கலைஞர் ஆட்சிக்கு வரவேண்டும்; வந்த பிறகு அமைச்சர்கள் எல்லாம் நாங்கள் சொன்னபடி கேட்க வேண்டும் என்று சொன்னார்.

இந்த வம்பு எதற்கு? நடராசனையே அமைச்சர் ஆக்கிவிட லாம் என்று நான் கருதுகின்றேன்.

அப்பொழுது அவர் என்ன செய்கிறார் என்பதை பார்க்க லாம் அல்லவா? எனவே ஒரு நேர்மையான, நெறியான, நீதி தவறாத ஆட்சியை, மக்களுக்கு நன்மை செய்வதையே குறிக்கோளாக கொண்ட ஆட்சியை, அமைச்சர் பொறுப்பை ஏற்பவர் மாத்திரமல்ல; தி.மு.கழகத்தின் அத்தனை உடன்பி றப்புக்களும் சேர்ந்து தரவேண்டும். எனவே ஆட்சி என்றால் அது கருணாநிதி ஆட்சி, அன்பழகன் ஆட்சி, சாதிக் ஆட்சி, நாஞ்சிலார் ஆட்சி என்று எங்களுடைய ஆட்சி அல்ல, அது தி.மு.கழக உடன்பிறப்புகளுடைய ஆட்சி. அதனால் அவர்க ளும் சேர்ந்து மக்களுடைய பொது நன்மைக்காக பாடுபட வேண்டிய ஆட்சி என்பதை மறந்துவிடக் கூடாது.

சில இடங்களில் நடராசன் பேசும்போது நாங்கள் ஆட்சிக்கு வந் தால் அமைச்சர்களுடைய பைல்களையெல்லாம் நாங்கள்தான் பார்க்க வேண்டும் என்று பேசியதாக நான் கேள்விப்பட்டேன்.

அப்படிப்பட்ட பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது என் பதை நான் இந்த மேடையிலே சொல்வதற்குக் காரணம் நான் அவரைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல.

தமிழகத்தின் எல்லா பகுதி மக்களும் இங்கு வந்துள்ளனர்

தமிழகத்தினுடைய எல்லா பகுதி மக்களும் இங்கு வந்திருக் கிற காரணத்தால், எல்லாப் பகுதிக் கழக நிர்வாகிகளும் இங்கே வந்திருக்கிற காரணத்தால் அந்தப் பேச்சாளர் வரும் பொழுது தலைவர் மாநாட்டில் சொன்னதை நினைவு படுத்து கிறோம் என்று நீங்கள் சொல்லி விட்டால் போதும்; ஆனால் நான் கேள்விப்படுவது தலைவர் அப்படித்தான் சொல்வார்; நீங்கள் பேசுங்கள் என்று சில நிர்வாகிகள் சொன்னதாகக் கூட கேள்விப்பட்டேன்.

அவர்களும் திருத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அ.தி.மு.க. வினர் எவ்வளவு கொள்கைக் குழப்பத்திற்கு சொந்தக்காரர்கள் என்பதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளை மாத்திரம் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1979-ஆம் ஆண்டு
எம்.ஜி.ஆர். பிறப்பித்த ஆணை

மண்டல் கமிஷனுக்காக சட்டமன்றத்திலே நாங்கள் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம் என்று இப்பொழுது சொல்கிறார்கள்.

அதற்காக நாங்கள் வழக்காடப் போகிறோம். சமூக நீதிக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்கிறார்களே! அதனைக் கேட்கும்பொழுது தித்திப்பாகத்தான் இருக்கிறது. படிக்கும் பொழுது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. வரவேற்கலாம் என்றுதான் தோன்றுகிறது.

ஆனால் உண்மை என்ன? இதே அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த பொழுது 79 ஆம் ஆண்டு என்ன ஆணை பிறப்பித்தார்?

சமூக அடிப்படையில் இல்லாமல் Socially and Educationally என்ற அடிப்படையிலே இல்லாமல் பொருளாதார அடிப்படையில், உச்ச வரம்பினை நிர்ணயித்து, ஒன்பதாயிரம் ரூபாய் வருமானம் என்று எல்லை கட்டி அவர்களுக்குத்தான் இட ஒதுக்கீடு என்று சொன்னார்.

அதற்காக, சமூக நீதியில் அக்கறை கொண்ட இயக்கங்கள், தி.மு.கழகம், திராவிடர் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சியிலே பிற்படுத்தப்பட்ட சமூகத்திலே உள்ள தலைவர்கள் எல்லாம் சர்வகட்சிக் கூட்டம் போட்டு எதிர்ப்புத் தெரிவித்த பிறகு தி.மு.கழகம் மறியல் நடத்துவதாக அறிவித்து, போராட்டத்துக்கு நாள் குறித்த பிறகுதான் எம்.ஜி.ஆர்.

சமூக நீதிக்கு எதிரான, சமூக அடிப்படையிலே உள்ள இட ஒதுக்கீட்டுக்கு எதிரான அந்த ஆணையை திரும்பப் பெற்றார் என்பதை யாரும் மறந்து விடமுடியாது.

இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற ஜெயலலிதா 1990-ஆம் ஆண்டு என்ன சொன்னார்?

வி.பி.சிங் மண்டல் கமிஷன் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு அதை செயல்படுத்துவேன்; என்று சொன்னபொழுது ஜெயலலிதா என்ன சொன்னார்?

பொருளாதார அடிப்படையிலேதான் இந்த இட ஒதுக்கீடு இருக்க வேண்டும். அதுதான் எங்களுடைய கொள்கை என்றார்.

மண்டல் கமிஷனை ஏற்றுக் கொள்வதாக அறிவித்த வி.பி. சிங் இராஜினாமா செய்ய வேண்டும் என்று சொன்னாரா அல்லவா? ஜெயலலிதா சொன்னாரா இல்லையா?

இன்றைக்கு மண்டல் கமிஷனை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்கிற காரணத்தால் அந்த மாய்மாலத்திலே மயங்கி விடலாமா? - என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாநில சுயாட்சியில்
எம்.ஜி.ஆர். பின்வாங்கியது ஏன்?

அதைப் போலத்தான் மதுரையில் 72 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில், மாநில சுயாட்சி பெற இராணுவத்தைக்கூட சந்திப்போம் என்று வீர முழக்கமிட்டார் எம்.ஜி.ஆர். ஆனால் அவரைச் சந்திக்க இந்திரா காந்தி ஒரு ஐந்தாறு வருமானவரி அதிகாரிகளை அனுப்பி வைத்தவுடன் மாநில சுயாட்சியே கூடாது என்று பேசத் தொடங்கினார். அவர் ஆட்சிக்கு வந்த பிறகும்கூட மாநில சுயாட்சி எங்கள் கொள்கை அல்ல அது பிரிவினைக் கொள்கை. எனவே நாங்கள் மாநில சுயாட்சியை ஏற்பதற்கு இல்லை என்று கூறிய

அதே இயக்கம் தான், அந்த அ.தி.மு.க. வின் முதலமைச்சர் தான் இன்றைக்கு பட்ஜெட் உரையில் மாநில சுயாட்சியைப் பற்றி குறிப்பிடுகிறார் என்றால் அந்த உணர்வு அவர்களுடைய உள்ளத்திலே பதிந்திருக்கிறதா, ஊறியிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

நாலு மாதங்களுக்கு முன்பு அயோத்தியில் கரசேவையை அனுமதிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு; இன்று அப்படிச் சொல்லவில்லையென்று ஜெயலலிதா சொல்கிறார்.

இவைகளெல்லாம் வெறும் நடிப்பு. இங்கே பேசிய தம்பி முரசொலிமாறன்கூட, இந்தி எதிர்ப்புத் தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார். அதுவும் ஜெயலலிதா நடத்திக் காட்டுகின்ற நாடகம் தான். இந்தி எதிர்ப்பு உண்மையிலேயே அ.தி.மு.க வின் கொள்கையாக இருக்குமேயானால் அவர்களுடைய வேகமான திட்டமாக இருக்குமென்றால் 1986 ஆம் ஆண்டு தி.மு.கழகம் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்ட நகலை பல்லாயிரம் பேர் கொளுத்தியபோது, சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்த பேராசிரியர் உள்ளிட்ட 10 பேரை இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்துகொண்டதற்காக சட்டமன்ற உறுப்பினர் பதவியை பிடுங்கிக் கொண்டு வெளியேற்றிய ஆட்சிதான் அ.தி.மு.க. ஆட்சி. எனவேதான் அவர்கள் இன்று இந்தி எதிர்ப்பு என்று சொல்வதையோ, மண்டல் கமிஷன், இட ஒதுக்கீடு என்று சொல்வதையோ அல்லது சமூக அடிப்படையில் இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று சொல்வதையோ, மாநில சுயாட்சிக் கொள்கைக்கு ஆதரவாகக் கருத்துக்களை எடுத்து வைப்பதையோ பா.ஜ.க.வை ஆதரிக்கவில்லை என்று கூறுவதையோ நம்மால் நம்ப இயலாது என்பதைதான் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியை எதிர்த்து காஞ்சியில் நடத்திய மாநாடு

தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் நேற்றைய தினம் பேசியவர்களும் இன்றையதினம் பேசியவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல 38-ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தப் போராட்டம். இதற்கு 55வயது ஆகிறது. 1938-ஆம் ஆண்டு தி.மு.கழகம் இல்லை. ஆனால் அன்றைக்கு இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்கள் எல்லாம் புலவர்களாக, கற்றறிந்த அறிஞர்களாக, கட்சி சார்பற்ற ஆன்றோர்களாக, சான்றோர்க ளாக, கட்சி சார்புடைய கொள்கைகளைக் கொண்ட பெரியார் அண்ணாவைப் போன்றவர்களுடன் அத்தனை பேரும் அமர்ந்து இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக படை கூட்டினார் கள். பாடிவீடு அமைத்தார்கள். அந்த நேரத்திலேதான் 38ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தப் போராட்டத்தைத் தொடங்குவ தற்கு முன்பு 38-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி காஞ்சிபுரத்தில் சர்.கே.வி. ரெட்டி தலைமையில் ஒரு இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அறிஞர் அண்ணா முன் னின்று அந்த மாநாட்டை நடத்தினார்.

அந்த மாநாட்டில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களைத்தான் இன்றைக்கு தி.மு.கழகம், மொழிப்புரட்சியிலேயே மூலக்கருத்தாக வைத்திருக்கிறது? அது என்ன கருத்து? சர். கே.வி. ரெட்டி தலைமை உரையில் கேட்கிறார். 'ஆதிமொழி என்று இந்தியைக் கூறமுடி யுமா? குறள்போன்ற எந்த அரிய நூலேனும் இந்தியில் காட்ட முடியுமா? அது ஒழியட்டும்; இந்தி நன்றாக வளர்ச்சியடைந்த மொழி என்று கூட ஏற்றுக் கொள்வோம். அதற்காக இந்தியைக் கட் டாயப்படுத்த முடியுமா?

இந்தி படித்தால்தான் வேலை கிடைக்குமா?

மேலும் அவர் தனது உரையில் இந்தியைப் படித்தால் வடநாட்டில் வேலை கிடைக்குமென்றால், வடநாட்டில்

படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையா என்று கேட்கிறார். நாம் இன்றைக்கு கேட்கிற அதே கேள்வியைத்தான் அன்றைக்கு சர். கே.வி. ரெட்டி கேட்டார்.

அடுத்து அவர் பேசும்பொழுது நாட்டுப் பற்று வளரவோ நாட்டு ஒற்றுமை பலப்படவோ, ஒரு பொது மொழி இருந்துதான் தீரவேண்டுமா? வரலாறுகள் வேண்டாமென்று தீர்ப்பளித்திருக்கிறது என்று கூறுகிறார். அவர் மேலும் பேசும்போது கனடாவில் கூட்டாட்சி இருக்கிறது. அங்கே பிரஞ்ச், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர்களுக்கு ஆங்கிலமும், டச்சுக்காரர்களுக்கு டச்சுமொழியும் இருக்கின்றன. இரு மொழிகளுக்கும் சம உரிமை. சம அந்தஸ்து வழங்கப்பட்டு, இரு மொழிகளும் ஆட்சி மொழிகளாக அமைய 1909-ல் சட்டமே இயற்றப்பட்டுள்ளது என்று சொல்கிறார்.

மேலும் கே.வி.ரெட்டி பேசும்போது சுவிட்சர்லாந்து நாட்டில் 1874ல் இயற்றிய சட்டப்படி ஜெர்மனி, இத்தாலி, பிரெஞ்ச் ஆகிய 3 மொழிகள் ஆட்சி மொழிகள். ஜெர்மன் மொழி பேசுவோர் 72 சதவிகிதம், பிரஞ்ச் மொழி பேசுவோர் 23 சதவீதம், இத்தாலி மொழி பேசுவோர் 5 சதவீதம்தான் ஆயினும் அங்கே 3 மொழிகளும் ஆட்சி மொழிகள். இவைகளை எல்லாம் விவரிக்கும்போது இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி தேவையா? தேவையே இல்லை என்பது விளங்கும் எனக் கூறுகிறார். அதைத்தான் நாம் இன்றைக்குச் சொல்கிறோம்.

இந்தி என்ற ஒரு மொழி மாத்திரம் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கத் தேவையில்லை. தமிழ் உள்ளிட்ட அரசியல் சட்டத்தின் அட்டவணையிலேயே குறிப்பிடப்பட்ட அத்தனை தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்பது தி.மு.கழகத்தின் குறிக்கோள். அண்ணா

வின் கொள்கை. இதை வைத்துத்தான் நாமும் பல எடுத்துக்காட்டுகளைக் கூறியிருக்கின்றோம். சட்டமன்றத்தில் நான் எதிர்க்கட்சித் தலைவனாக இருந்தபொழுது கூட ஒருமுறை சொன்னேன். அப்போது எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தார். கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரும், பத்திரிகை ஆசிரியரும் கியூபக் என்கிற பிரதேசத்தை தனிநாடாக ஆக்க வேண்டுமென்று குரல் கொடுத்தவருமான ஜெரால்டு பெல்லட்டியா என்பவர் சொன்ன வாசகம் இது. அவர் என்ன சொன்னார் தெரியுமா? நான் பிரெஞ்ச் மொழி பேசுகிறவன். ஆனால் கனடா நாட்டில் வாழ்கின்றவன். எனவே நான் முதலில் பிரஞ்சுக்காரன். இரண்டாவதாகத் தான் கனடா நாட்டுக்காரன்.

If I told you that I am firstly a Canadian and that I belongs to French Community comes second that will be a shameful lie என்கிறார்.

நான் பிரஞ்சுக் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதை இரண்டாவதாக ஆக்கிவிட்டு, நான் கனடியன் என்பதை முதலாவதாக ஆக்கினால் அதைவிட வெட்ககரமான பொய் வேறொன்றும் இருக்க முடியாது என்று குறிப்பிடுகின்றார். அவர் கியூபக் பிரிந்து போய்விட வேண்டுமென்று குரல் கொடுத்தவர். நாம் பிரிவினையை அண்ணா காலத்திலேயே, 1962லேயே விட்டு விட்டவர்கள். ஆனால் ஜெரால்டு பெல்லட்டியா சொன்னதைத் தான் நானும் சொல்ல விரும்புகிறேன். நான் மொழியால் தமிழன். இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன், உலகத்தால் மனிதன்.

மொழியால் தமிழனாக இருப்பதை அகற்றி இரண்டாம்தர குடி மகனாக நம்மை ஆக்கவே இந்தி ஆதிக்கம் திணிக்கப்படுகிறது. இந்தி ஆதிக்கம் என்றால் என்ன? நேற்றைக்கு பேராசிரியர் பல்வேறு விளக்கங்களோடு எடுத்துரைத்தார்.

தமிழ்ச் சமுதாயம் எப்படி கலையில், இலக்கியத்தில், கலாச்சாரத்தில் பின்னடைந்தது? எப்படி பின்னுக்குத் தள்ளப்

பட்டது என்ற வரலாற்று உண்மைகளையெல்லாம் எடுத்துச் சொன்னாரே, இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார் களே, அதற்கு மூலகாரணமாக அமைந்த மொழி, அன்றைக்கு ஆரியர்களுக்குக் கிடைத்த படைக்கலன் வடமொழி சமஸ்கிரு தம், அந்த சமஸ்கிருதம் மூலம் நமது இனத்தை தாழ்த்தியவர் கள் தான் இப்போது அதன் வழி வழியாக வந்த இந்தி மொழியினால் மேலும் தமிழ்ச் சமுதாயத்தை தாழ்த்த முயலுகி றார்கள்; வடமொழியை சமஸ்கிருதமொழியை, தேவமொழி எனக்கூறி, தமிழ்ச் சமுதாயத்தை தாழ்த்த முனைகிறார்கள். வடமொழி - சமஸ்கிருதமொழி தேவ மொழி எனக் கூறி அதில் எழுதப்பட்ட நீதிகள் சாஸ்திரங்கள் இவைகளையெல் லாம் எடுத்துக்காட்டி தமிழர்களை சூத்திரர்களாக ஆக்கினார் கள். திராவிடர்களை இழிவுபடுத்தினார்கள். இந்த சாஸ்திரங் கள், வேதங்கள், மனு தர்மங்கள் இவைகளை வைத்து நடத்தப்பட்ட அந்த சூழ்ச்சி நாடகத்தை, சமஸ்கிருதம் இன்றைக்கு செத்துப் போய்விட்ட காரணத்தால் இந்தியைக் கொண்டு நிறைவேற்றத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

அன்றைக்கு சமஸ்கிருதம் எப்படியெல்லாம் நம்முடைய கலாச்சாரத்தைக் கெடுத்தது? எப்படியெல்லாம் நம்மை அடி மைப்படுத்தியது? பிராமணனுக்கு மங்கலகரமான பெயரை யும், சூத்திரனுக்கு தாழ்வான பெயரையும் இட வேண்டும். சொல்வது எது தெரியுமா? மனு தர்ம சாஸ்திரம்! அத்தியாயம் இரண்டு, சுலோகம் முப்பத்து ஒன்று. நேற்று பேசிய தமிழ்க் குடி மகனாரும், இன்று காலையில் பேசிய புலவர் நன்ன னும், தமிழ்க் குடும்பங்களில் நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் மனு தர்ம சாஸ்திரம் என்ன சொன்னது தெரியுமா? பிராமணனுக்கு மங்கலகரமான பெயரையும் சூத்திரனுக்கு கேவலமான தாழ் வான பெயரையும்தான் சூட்ட வேண்டுமென்று சொன்னது.

பிராமணன் கொலை செய்தால் தூக்கில் போடக் கூடாதாம்!

இன்னொன்று பிராமணனின் பொருளை அபகரித்த சூத்திரனை சித்ரவதை செய்து கொல்ல வேண்டும். ஆனால் சூத்திரருடைய பொருளை பிராமணன் தன் இஷ்டப்படி கொள்ளையடிக்கலாம் என்று மனுதர்மம் - அத்தியாயம் ஒன்பது, சுலோகம் இருநூற்றி நாற்பத்து எட்டு சொல்கிறது.

அடுத்தது பிராமணன் கொலை செய்தால் அவனை தூக்கில் போடக்கூடாது. அவன் தலையை மாத்திரம் மொட்டை அடித்தால் போதும் மற்ற ஜாதிக்காரன் என்றால் அவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும். (மனு தர்ம சாஸ்திரம் அத்தியாயம் 8 சுலோகம் 379.) பெண் போகம், புலால் உண்ணல், கள் குடித்தல் ஆகியவை மனிதனுக்கு இயற்கையான குணங்கள். இவைகளைக் குறித்து விதிகள் அவசியமில்லை. நான்கு வர்ணத்தாரின் பெண்களையும் பிராமணன் மாத்திரமே அவன் விரும்பியவாறு விவாகம் செய்து கொள்ளலாம். புத்திர பாக்கியம் இல்லாத ஒரு பிராமண பெண் ருது காலத்தில் தனது உடம்பில் நெய்யைப் பூசிக்கொண்டு தனது கணவனின் சகோதரனையோ, அல்லது தனது குலத்தில் யாருடனோ உடலுறவு கொள்ளலாம். மனு ஸ்மிருதி வேதங்கள் சுருதி என இவைகளிலே சொல்லப்பட்ட - சமஸ்கிருத மொழி அடிப்படையில் சொல்லப்பட்ட கருத்துக்கள். இவைகளையெல்லாம் தொகுத்தளிப்பது நானல்ல. முதலமைச்சர் ஜெயலலிதாவால் வெளியிடப்பட்ட நாவலர் எழுதிய திருக்குறள் தெளிவுரை என்ற புத்தகத்திலே தொகுத்தளிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் தான் இவை. பாவம் அந்த அம்மையார். நாவலர் எழுதிய அந்தப் புத்தகத்தில் அட்டையை மட்டும் பார்த்து விட்டு, அதை வெளியிட்டிருப்பார் என்று கருதுகின்றேன்.

இவைகள் எல்லாம் நமது சுயமரியாதை இயக்கத்தினுடைய ஆரம்ப காலத்தில் எடுத்துரைக்கப்பட்ட ஆதாரபூர்வமான

கருத்துக்கள். வேதத்திலிருந்து, மனு ஸ்மிருதியிலிருந்து, மனு தர்மசாஸ்திரத்திலிருந்து எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் அந்த சமஸ்கிருதம் இன்றைக்கு செத்து விட்டாலும் கூட எழுதலாம்; படிக்கலாம்; ஆனால் பேச முடியாது; அது செத்தமொழி நாவலர் சோமசுந்தர பாரதியார் சமஸ்கிருதம் என்று கூட சொல்லமாட்டார். ''ஜஞ்ஜக் கிருதம்'' என்றுதான் சொல்லுவார். அந்த மொழி செத்துப் போன மொழியாகிவிட் டது; ஆனால் செத்துப் போனாலும் அதை விடவில்லை. மறைந்த அன்பில் தர்மலிங்கம்தான், ''இருந்தும்கெடுத்தான் செத்தும்கெடுத்தான் இருங்களூர்க் கணக்கன்'' என்று சொல்லு வார். இருங்களூரில் ஒரு கணக்கன் இருந்தான்; அந்தக் கணக்கனுக்கு அந்த ஊர் மக்களை கொடுமைப்படுத்துவது தான் வேலை. பல தவறுகளைச் செய்வான்; பெண்களிடத்தில் தவறாக நடந்து கொள்வான். எல்லோரையும் அடிமைப்ப டுத்தி கொடுமைப்படுத்துவான்; அப்படிப்பட்ட கணக்களைப் பார்த்து ஊரே பயந்தது; இவன் தொலையமாட்டானா என்று ஊரே எண்ணியது. ஒரு நாள் கணக்கனுக்கு உடல் நலிவு ஏற்பட்டு செத்துவிடுவான் என்ற நிலைமை வந்தது; அப் போது ஊராரை எல்லாம் வரச் சொல்லி ஊர்மக்களே என்னை மன்னித்து விடுங்கள்; நான் உங்களுக்கு எவ்வளவோ கொடு மைகளை செய்திருக்கிறேன். எனவே என்னை நீங்கள் மன்னிப்பதற்கு அடையாளமாக என்னுடைய வேண்டுகோள் ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னான்.

என்ன வேண்டுகோள் என்று அந்த ஏமாளி மக்களும் கேட்டார்கள். ''ஒன்றுமில்லை இவ்வளவு கொடுமை செய்த என்னை செத்துப்போன பிறகு இந்த ஊரிலே புதைத்து இந்த ஊருக்கு அவமானம் ஏற்படுத்தாதீர்கள். எனவே, ஆற்றுக்கு அக்கரையில் உள்ள அடுத்த ஊரிலே கொண்டு போய் புதைத்து விடுங்கள் இங்கே புதைக்காதீர்கள்'' என்று சொன் னான். பிறகு செத்துப் போனான். உடனே அந்த ஊர்மக்கள், போனால் போகிறான் பாவி சாகும்போது வரம் கேட்டான்;

நிறைவேற்றுவோம் என்று பிணத்தை எடுத்துக் கொண்டு போய் அடுத்த ஊரில் புதைக்க ஆரம்பித்தார்கள். அடுத்த ஊர்க்காரன் சண்டைக்கு வந்து விட்டான். அந்தப் பாவி பிணத்தை இங்கே கொண்டு வந்தா புதைக்கிறாய்? என்று சண்டைக்கு வந்து விட்டார்கள் இதனால் இரு ஊர்க்காரர்க ளுக்கும் இடையில் மோதல், ரகளை, அமளி, இதனால் இரண்டு ஊர்களும் ரத்தக் காடாகிவிட்டது. ஆக, இருங்க ளூர்க்கணக்கன் இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான் என்பார்கள் அதுபோலத்தான் சமஸ்கிருதம் இருந்தும் கெடுத் தது; தமிழ்ச் சமுதாயத்தை இப்போது செத்தும் இந்தி உருவத்திலே வந்து நம்மை கெடுக்கப் பார்க்கிறது. எனவே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இந்த போராட்டத்தை நடத்துகிறோம். இந்த போராட்டத்தை புதியதாக உங்களுக்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. எல்லோரும் அறிந்ததுதான். பல கருத்தரங் கங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. பல பொதுக் கூட்டங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தி எதிர்ப்பு மாநாட்டை ஒட்டி கடந்த ஒரு மாத காலமாக தமிழகம் முழுவதும் பிரச்சாரக் கூட்டங்கள் நடந்துள்ளன.

1938 முதல் 1965 வரை மொழிப் புரட்சி முடிந்து அண்ணா ஆட்சிக்கு வந்து இருமொழித் திட்டம் - தமிழ், ஆங்கிலம் இரண்டுக்குத்தான் இடம் என்று ஆக்கப்பட்டு, அதன் பிறகு 77-ல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு, மீண்டும் இந்தி தலைநீட்டத் தொடங்கி, அதை எதிர்த்து 86-ம் ஆண்டு நாம் அறப்போர் நடத்த அரசியல் சட்ட நகலையே கொளுத்துகிற அளவிற்கு தீவிரப் போராட்டம் நடத்தியும்கூட, இன்னமும் இந்த ஆட்சியில் எம்.ஜி.ஆர் ஆட்சியைவிட வேகமாக விரைவாக இன்று நடைபெறுகின்ற ஜெயலலிதா ஆட்சியில் இந்தி தமிழகத்திலே வேக வேகமாக திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நவோதயா பள்ளிகளுக்கு நடைபாவாடை விரித்த அ.தி.மு.க !

அதற்கு நடைபாவாடை விரிப்பதைப்போல கடந்த ஆண்டு நவோதயா இந்திப் பள்ளிக்கூடங்களை நாங்கள் வரவேற்கி றோம் என்று வரவேற்பு அளிக்கப்பட்டுவிட்டது. இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியால் என்பதை யாரும் மறுக்க முடியாது. இது குறித்து முதலமைச்சரும் கல்வி அமைச்சரும் பேசியது ஏடுகளில் வந்ததே ஆதாரங்களாக உள்ளன.

இன்றைக்கு நிலைமை என்ன? தொலைக்காட்சியில் தமி ழுக்கு உள்ள நேரம் குறைக்கப்பட்டு விட்டது. ஏன் நாம் போராட்டம் வேண்டும் என்கிறோம்?

அது மாத்திரமல்ல. தொலைக்காட்சியிலே முப்பது நிமிடம் சமையல் கலை என்கிற பெயரால் அதற்கு ''மாதாஜிக்கி'' என் கிற இந்திப் பெயர் - சமையல் கலை பயிற்சி நடைபெறுகிறது.

வானொலியில் பகல் 2 மணிக்கு செய்திக்குப் பிறகு 2.15 மணிக்கு மேல் நாள்தோறும் 15 நிமிடம் இந்திப் பாடல் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

எட்டாவது வகுப்பு படித்துவிட்டு பார்க்கக்கூடிய அட் டெண்டர் (attender) வேலைக்குக்கூட இந்தி தெரிந்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறது.

மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்று ஏற்றுக் கொண்டே போதிலும், தமிழகத்தில் இயங்குகிற மத்திய அரசு அலுவல கங்களுக்கு இந்திப் பெயரிலேயே பெயர் சூட்டப்பட்டு விளம்பரப் பலகைகள் எழுதப்பட்டு இயங்கிக் கொண்டிருக் கின்றன.

உதாரணமாக, Department of Overseas Communications அயல் நாட்டுச் செய்தித் தொடர்பு அலுவலகம் என்றுதான் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத வேண்டும்.

ஆனால் எப்படி எழுதி இருக்கிறார்கள் தெரியுமா? இந்தி எழுத்தில் 'விதேஷ் சஞ்சார் பவன்' என்று எழுதி இருக்கிறார்கள்.

ஆனால் ஆங்கிலத்தில் எப்படி எழுதி இருக்கிறார்கள். மொழி பெயர்த்தா எழுதி இருக்கிறார்கள்? அல்ல. ஆங்கிலத் தில் Videsh Sanchar Bhavan என்றும், தமிழில் ''விதேஷ் சஞ்சார் பவன்' என்றும் எழுதி இருக்கிறார்கள்.

எனவே இந்திமொழி ஓசையிலே எழுதப்பட்டுள்ளது. ''பிராவிடெண்டு பண்ட்'' அலுவலகத்திற்கு இப்போது பெயர் என்ன தெரியுமா? 'பவிஷய நிதி பவன்' என்பதாகும்.

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் விழா அழைப்பிதழ்கள் இந்தி, ஆங்கிலத்தில்தான் உள்ளன. மாநிலத் தில் ஆட்சி மொழியாக தமிழை வைத்துக் கொண்டிருக்கி றோம். ஆனால் தமிழ் மொழிக்கு இடமில்லை. ஆலைகளுக்கு அனுப்புகிற நூல் கட்டுகளில் இந்தியிலே அச்சடித்துத்தான் அனுப்ப வேண்டும் என்கிற உத்தரவு - அதுவும் இந்தியி லேயே உள்ளது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இந்தித் திணிப்பு அநியாயம்!

பொதுத்துறை நிறுவனமான ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பல துறைகள் இருக்கின்றன. குழந்தை நலத் திட்டம், குழந்தைகள் கல்வித் திட்டம், வீட்டு வசதித் திட்டம், வீட்டு வசதி உதவித் திட்டம், குடும்ப நலத் திட்டம் என்று பல பெயர்கள் இருக்கின்றன.

இவைகளை எல்லாம் தமிழில் எழுதினால் புரியும். ஆனால் பெயர்களை படிக்கிறேன் பாருங்கள், புரிகிறதா பாருங்கள். மயக்கம்தான் வரும்.

ஜீவன் மித்ரா, நியூ ஜன ரட்சகா, ஜீவன் சாத்தி, ஜீவன் பால்யா, பவிஷ்ய ஜீவன், ஜீவன் கிஷோர், ஜீவன் குபேர்,

ஜீவன் சரிதா, ஜீவன் சகாய, ஜீவன் கிருஹா, ஜீவன் அட்சய, ஜீவன் தாரா, ஜீவன் சுகன்யா, பீம நிவாஸ் யோஜனா, கிரக ஜோதி, கிரக பிரகாஷ்... என்ன புரிகிறது? 'எதைப் புரிந்து கொண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை அணுக முடியும்?

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் Housing Finance Limited - ஏரியா அலுவலகங்களுக்கு என்ன பெயர் தெரியுமா? ஜீவன் பிரகாஷ் என்று பெயர்.

அந்த அலுவலகத்தின் தந்தி முகவரி என்ன தெரியுமா? பீம மண்டல்.

இன்றைக்கு புது ஆணை ஒன்று வந்திருக்கிறது. அந்த புது ஆணை என்ன தெரியுமா?

ஆகஸ்டு 15-ம் தேதியிலிருந்து அந்த உத்தரவு அமலுக்கு வர இருக்கிறது. செய்தித்துறை பிரிவின் இயக்குநர் பதவிக்கு வருகிறவர்கள் இந்தியில் தேர்ச்சி இல்லாவிட்டால் வானொலி நிலையங்களில் அந்தப் பதவிக்கு வர முடியாது.

இப்போது ஆங்கிலத்தில் டெல்லி நிகழ்ச்சியில் ஒலி பரப்ப அனுப்பப்படுகிற செய்திகள் இனி இந்தியில்தான் அனுப்பப டவேண்டும்.

இதைப் பற்றி தினமணி பத்திரிகை கூட செய்திக் குறிப் பிலே ஆத்திரப்பட்டு எழுதுகிறது.

அகில இந்திய வானொலியின் செய்திச் சேவைப் பிரிவுப் பணிகளில் இந்தியை திணிக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசின் செய்தி ஒலிபரப்புத்துறை தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது என்றும், இந்தி பேசாத மாநிலங்களில் இந்தித் திணிப்பு கிடையாது என்ற நேருவின் உறுதிமொழி காற்றில் பறக்கும் என்பதை இது உணர்த்துகிறது என்று நான் சொல்லவில்லை தினமணி சொல்கிறது.

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தித் திணிப்பு கிடையாது என்ற நேருவின் வாக்குறுதி காற்றில் பறக்கும் என்பதை இது உணர்த்துகிறது. இனிமேல் அகில இந்திய வானொலி யின் செய்திச் சேவை பிரிவுப் பணிகளில் இந்தியைத் திணிக்கும் நடவடிக்கையை மத்திய அரசின் செய்தி ஒலிபரப் புத்துறை தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது.

தினமணி, கட்டுரையை எப்படி முடிக்கிறது தெரியுமா?

இந்தி பேசாத மாநில மக்கள் இந்த நாட்டின் இரண்டாம் தர குடிமக்களே என்பதை உணர்த்த இந்த ஆண்டு சுதந்திரதி னம் தேர்வு செய்யப்பட்டு அன்று முதல் இந்த ஆணை அமலாகும் என முடிக்கிறது.

எனவே நான் இந்த மாநாட்டில் பொதுக்குழு நிர்வாகக் குழு இவைகளின் ஆணைக்கு இணங்க உங்களுடைய எதிர் பார்ப்புக்கு இணங்க இந்த அறிவிப்பைச் செய்ய வேண்டியவ னாக இருக்கிறேன். இதைத் தீர்மான மாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

இங்கே நண்பர் ஆர்க்காடு வீராசாமி பொதுக்குழு தீர்மானங் களையெல்லாம் படித்திருக்கிறார். ஒரு தீர்மானம் மாத்திரம் மாநாட்டுத் தலைவருக்கே என ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கி றது.

பொதுக்குழு தீர்மானம்

அந்தத் தீர்மானத்தைப் படித்துவிட்டு தொடர்ந்து என்னு டைய அறிவிப்பை தலைமைக் கழகத்தின் சார்பாக வெளியிட இருக்கிறேன்.

அந்தத் தீர்மானம்:

மொழி அடிப்படையில் பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட இந்திய நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமை காண்

போம் என்பதற்கு மாறாகவும், ஒருமைப்பாடு உணர்வைக் கட்டிக் காத்திடும் முயற்சிக்கு ஊறு தேடும் வகையிலும் ஆட்சி மொழி என்ற பெயரால் இந்தி மொழி ஆதிக்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கப்பட்டு, இந்தி பேசாத மாநில மக்கள், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்படும் நிலையைத் தவிர்த்திட - எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட எல்லா மொழிகளும் இந்திய நாட்டு ஆட்சிமொழி களாக வேண்டும் அதுவரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துக்காட்டி நீண்ட காலமாக நாம் வலியுறுத்திவரும் கோரிக்கையை அலட்சியம் செய்து மத்திய அரசு பல்வேறு வழிகளில், குறிப்பாக, தொலைக்காட்சி, வானொலி, மாநிலத்திலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள், மத்திய அரசின் சார்பில் நடத்தப்படுகிற கல்விக் கூடங்கள் என அனைத்து அமைப்புகளையும் பயன்படுத்தி இந்தியைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் செயலை இந்த மாநில மாநாடு மிக வன்மையாக கண்டிக்கிறது.

-என்கிற வகையிலே அந்தத் தீர்மானத்தையும் தொடர்ந்து

மாநாட்டுத் தலைவர் என்கின்ற முறையிலே தலைமைக் கழக, நிர்வாகக்குழு, செயற்குழு, பொதுக் குழு அனுமதி பெற்று இந்த அறிவிப்பை வெளியிடுகின்றேன்.

எங்கள் மாநில ஆட்சிமொழி தமிழாக இருக்கும்பொழுது ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும் பொழுது ஆங்கி லம் - தமிழ் இரண்டும்தான் தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் இருக்க வேண்டும். இந்தி தேவை யில்லை. அதைத் திணிக்கக் கூடாது. ஆனால், மத்திய அரசு தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுத்துறைகளான தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், இர யில்வே, தொலைக்காட்சி, வானொலி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு தமி

ழுக்கு இடமே அளிக்காமல் இந்தியில் பெயர்களை வைத்தல், இந்தியில் அறிவிப்புகள் செய்தல், இந்தியில் கடிதத் தொடர்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்தப் போக்கை கண்டிக்கின்ற வகையிலும் தமிழனின் உரிமைகளை நிலைநாட்டக் கூடியவகையிலும் - தமிழகத்தைப் பொறுத்த மட்டில் மத்திய அரசுத் துறையோ, அல்லது மத்திய பொதுத் துறையோ, எதுவாக இருந்தாலும் தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி, வருகிற ஏப்ரல் 20-ந் தேதி தி.மு.கழகம் போராட்டத்தில் இறங்குகிறது. (பலத்த கைதட்டல்)

அந்தப் போராட்டம் தமிழகம் முழுவதும் இரயில் நிறுத்தப் போராட்டமாக இருக்கும் (பலத்த கைதட்டல்)

அன்று இரயில்கள் போகக் கூடாது போக விடக் கூடாது. (பலத்த கைதட்டல், பத்து நிமிடம் தொடர்ந்து ஆரவாரம்)

போராட்ட வீரர்கள் பட்டியல்
ஏப்ரல் முதல்வாரம் வெளியிடப்படும்!

மாவட்டக் கழகங்களைக் கலந்துகொண்டு யார், யார், யாருடைய தலைமையில் எந்தெந்த ஊர்களில் இரயில் மறியல் போராட்டம் என தலைமைக் கழகம் ஏப்ரல் முதல் வாரத்தில் பட்டியல் வெளியிடும்.

மீண்டும் சொல்கிறேன்

ஏப்ரல் 20 மீண்டும் நமது மொழிப் போர்! இரயில் நிறுத்தப் போராட்டம்!! அன்று இரயில்கள் போகக் கூடாது; போக விடவும் கூடாது. பயணிகளும் அன்று ஒருநாள் இரயில் பயணத்தை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இஃதன்னியில் தமிழகம் முழுவதும் பொது இடங்களில் எங்கெங்கே இந்தி எழுத்துக்கள் இருக்கிறதோ அந்த எழுத்துக் களையெல்லாம் தமிழ் உணர்வு படைத்தவர்கள் தொடர்ந்து

அழித்துக் கொண்டே இருக்க வேண்டும் (பலத்த கைதட்டல்) அதற்கு நேரம், காலம், நாள், தலைமை இதெல்லாம் கிடையாது அழித்துக் கொண்டே இருக்க வேண்டும். அது தான் தொடர் போராட்டம்.

தமிழுணர்வு படைத்தோரெல்லாம்
போராட வருக! வருக!


இதில் தி.மு.கழகத்தினர் மாத்திரம் அல்ல தமிழ் உணர்வு படைத்த காங்கிரஸ்காரர்களை அழைக்கிறேன். அப்படி அன்றைக்கு மறைமலை அடிகளை பெரியாரும், அண்ணாவும் அழைத்த நேரத்தில் தான் காங்கிரஸ்காரரான சோமசுந்தர பாரதியார் இந்த இயக்கத்திற்கு வந்தார். காங்கிரஸ்காரராக இருந்த நம்முடைய தம்பி சோமுவுடைய தந்தை என்.வி. நடராசன் இந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு வந்தார். காங்கிரஸ்காரர்களாக இருந்த எத்தகையோ பேர் அன்றைக்கு இந்த இயக்கத்திற்கு வந்தனர். அதைத்தான் நான் இன்றைக்குச் சொல்கின்றேன். காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன். தமிழ் உணர்வு படைத்த அத்தனை பேரும் இரயில் நிறுத்தப் போராட்டத்தில் - இரயில் நிறுத்தப் போராட்டத்தை தி.மு.கழகம் செய்யும் என்றாலும்கூட இந்த இந்தி எழுத்துக்களை அழிக்கின்ற போராட்டத்தில் தமிழ் உணர்வு படைத்த அத்தனை பேரும் தன்மானத் தமிழர்கள் அத்தனை பேரும் அணி அணியாக சாரை சாரையாக வாருங்கள்! வாருங்கள்!! என்று கேட்டுக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)

ஐம்பத்தைந்து ஆண்டு காலமாக ஈடுபட்டிருக்கின்ற போராட்டம், என்னுடைய 14-வது வயதில் ''ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே!'' என்று புலிவில் - கயல்பொறித்த கொடியைத் தூக்கிக் கொண்டு திருவாரூர் வீதியிலே நான்

நடைபோட்ட போராட்டம் நேற்று பேராசிரியர் குறிப்பிட்ட தைப்போல ''கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்! கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!''

—என்று புரட்சிக் கவிஞன் பாடினானே அந்தக் காலத்துப் போராட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும், நம்முடைய தளபதி அழகிரிசாமியும், மணவை திருமலைசாமியும் திருச்சியில் தமிழர்மொழிப் படை நடத்திய போராட்டம், தாளமுத்து நடராஜனை பலிகொடுத்த போராட்டம் சின்னச்சாமியை - சிவலிங்கத்தை - அரங்கநாதனை, விராலி மலை சண்முகத்தை மாணவர் சாரங்கபாணியை பலி கொடுத்த போராட்டம்-

அண்ணாமலை நகரில் இராசேந்திரனை பலி கொடுத்த போராட்டம் - ஆயிரமாயிரம் வீரர்களை பலிகொடுத்த போராட்டம் - அந்தப் போராட்டம் தான் மீண்டும் வேண்டும் என்றால், அது தவிர்க்க முடியாது என்றால், நாங்களும் அந்தப் போராட்டத்தில் இருந்து விடுபடுவது முடியாது - முடியாது - முடியாது.



கொள்ளுப்பாட்டிகளும், பாட்டன்களும் தூக்கிய கொடி!

உடன்பிறப்பே,

''ஒடிவா மாநாட்டுக்கு'' என்பதற்கு மட்டும் அத்தனை கடிதங்கள் எழுதினாய்; வந்து திரும்பிய பிறகு ஒரு நன்றிக் கடிதம் கூட எழுதவில்லையே என்று நீ கோபித்துக் கொள்வ தற்கு முன்பே; இதோ இந்த நன்றிக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். நீயும் உன்போன்ற உடன்பிறப்புக்களும் 29-ந் தேதியே ஊர்போய்ச் சேர்ந்திருப்பீர்கள். ஆனால் நானும் பேராசிரியரும், சாதிக்கும், வீராசாமியும் மறுநாளும் கோவை யில் தங்கி மாநாடு சிறப்புற ஒத்துழைத்த மாநகர, நகர ஒன்றிய, கிளைக்கழகச் செயலாளர்களுக்கெல்லாம் ஊக்கப்பரி சுகளை வழங்க வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டி யவர்களானோம். வரவேற்புக் குழுத் தலைவர் கண்ணப்பன் அவர்களின் வேண்டுகோளைத் தட்டக் கூடாது என்பது மட்டுமல்ல; மாநாட்டு வெற்றிக்குத் தோள் கொடுத்து, மாற்றாரின் மன எரிச்சலின் விளைவாக மாநாட்டுப் பந்தலே கொளுத்தப்பட்டு; மாநாடு நடைபெறுமா என எழுந்த கேள்விக்குறிக்கு; விடையாகிச் சிலிர்த்தெழுந்து வீறுகொண்டு பணியாற்றிய கழக மாமணிகளையெல்லாம் அருகழைத்துப் பேசி அளவளாவி மகிழ்ந்திடக் கிடைத்திட்ட அந்த வாய்ப்பு ஒரு ''வரப்பிரசாத'' மாகவே அமைந்தது.

''முக்கடல்தானே உண்டு; அவைதானே கோவையில் வந்து சங்கமித்திருக்கக்கூடும் வேறு எக்கடல் புதிதாக வந்து இணைந்தது!'' என வியப்புறும் வண்ணம் குழுமிய அந்தக் கூட்டத்தை ''பார் சிறுத்தலால் படை பெருத்ததோ? படை பெருத்தலால் பார் சிறுத்ததோ?'' எனப் பாடிய ஜெயங் கொண்டாரே திரும்ப வந்து உவமை கூறிக் கவிதை புனைய முடியுமோ என்ற ஐயப்பாடு எனக்கு அழுத்தமாக உண்டு.

திருச்சியில் இருந்த என் காதில் பந்தலுக்குத் தீயிடப்பட்டு விட்டது என்ற செய்தி இடியென விழுந்து, அது இதயத்தில் இறங்கி - என்னை ஒருக்கணம் நிலைகுலையச் செய்தது எனினும்; நீயிருக்கிறாய் என்ற நம்பிக்கையில் ''முழுப் பந்தலும் எரிந்து, வெறும் பொட்டல் வெளியே மிச்சமிருப்பி னும் மாநாட்டை நடத்தியே தீருவது'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன் கோவைக்கு!

இரவு 10 மணி அளவில் கோவை மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்த என்னை கண்ணீர்த் துளிகள்தான் வரவேற்றன. நமது கழகம் தொடங்கியபோது, நமக்கு இப்படி ஒரு பெயர் உண்டே!

என் முகத்தைப் பார்த்து, வரவேற்புக் குழுவின் செயல்வீரர் களுக்கும் - அவர்களின் முகத்தைப் பார்த்து எனக்கும் ஏற்பட்ட அந்த நம்பிக்கையில் வலிவும், கொள்கைப் பிடிப் பின் உறுதியும் முப்பத்தி ஆறே மணி நேரத்தில்; மீண்டும் பத்து இலட்சம் பேர் உள்ளேயும் - பந்தல் கொள்ளாத பல இலட்சம் பேரின் கூட்டம் வெளியேயும் அமர்ந்தும் நின்றும் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிற அளவுக்கு முழுப் பந்தலையும் உருவாக்கிக் காட்டிய மாட்சியை என்னென்று சொல்வேன்! எப்படிப் புகழ்ந்துரைப்பேன்!

மார்ச் 25-ஆம் நாள் பிற்பகல் பந்தல் எரிகிறது 26 ஆம் நாள் காலையில் பொதுக்குழு கூடுகிறது - காலை 10 மணிக்கு பந்தல் முகப்பில் 70 அடி உயரத்தில் கழகக் கொடியேற்றுகி றேன் தொண்டர் படையின் அணிவகுப்பு மரியாதை அதற்க டுத்து மூன்றுமணி நேரம் பொதுக்குழு நடக்கிறது. தலைமைக் கழகத் தணிக்கைக் குழு அறிக்கை, செயற்குழுவினரும், தீர்மானக்குழுவினரும் விவாதித்து எழுதிய தீர்மானங்கள், இவற்றைப் பொதுக்குழு ஏற்கிறது. பிற்பகல் 1 மணி அளவில் செய்தியாளர்களின் சந்திப்பு. பல கேள்விகளுக்கு விடையளிக் கிறேன் விளக்கமாக.

மாலை 4 மணிக்கு குறிப்பிட்ட இடத்திலிருந்து பேரணி ஊர்வலம் புறப்பட்டு விடுகிறது. நானும் பேராசிரியரும், சாதிக்கும், நாஞ்சிலாரும் மற்றும் கழக முன்னணியினரும் பேரணியைப் பார்வையிட அமைக்கப்பட்டிருந்த மேடைக்க ருகே! அப்போதே பேரணியின் நுனி முகப்பு வந்து விடுகிறது. இரவு ஒரு மணிக்கு மேல்தான் அந்த மேடையை விட்டு நகருகிறோம். அதாவது ஊர்வலம் ஓர் குறிப்பிட்ட இடத்தைக் கடக்க ஒன்பது மணி நேரத்துக்கு மேலாகியிருக்கிறது.

கட்டுப்பாடு குலையாமல் கழகத்தளகர்த்தர்களாம் மாவட் டக் கழகச் செயலாளர்களும், தலைமைக் கழகத்தின் பல்வேறு அணிகளின் செயலாளர்களும் பேரணியில் கலந்து கொண்டு வந்ததும், ஒரு துளி அசம்பாவித நிகழ்ச்சிக்கும் இடமின்றிப் பேரணி நடந்ததும் - பேரணியில் பெரும் பகுதியினர் இளைய தலைமுறையினராக எழுச்சியுடன் நடைபோட்டதும்; அப் பப்பா - ஆனந்தக் கண்ணீரையல்லவா என் விழிகளில் அருவியென வழியவிட்டு விட்டது!

பேரணி வரும்போது சற்று நேரம் மழைத்துளிகளால் நீ ஈரமானாய் என்று எண்ணிக் கொண்டிருப்பாய் - இல்லை, உடன்பிறப்பே; இல்லை! அது என் ஆனந்தக் கண்ணீரின் திவலைகள்! ஆம்; உன்னைத் தொட்டு ''அபிஷேகி''த்தன! அந்தத் துளிகள் பேறு பெற்றன!

இப்படியொரு தொண்டர் சேனை - அற வழிப்பட்டாளத் துச் சிப்பாய்கள் - ஆயிரம் ஆயிரமாய், இலட்சம் இலட்சமாய் அண்ணாவின் இந்த அறிவுப்பாசறையைத் தவிர வேறு எங்கே உண்டு சொல்வாய்! அதனால்தானே சுடச்சுட ஒளிரும் பொன்னாக - சோதனை நெருப்பில் கருகிப் போகாமல்; கதிரவனைக் கொளுத்தவும் ஒரு தீயுண்டோ எனக் கேட்டுப் பீடு நடையும் பெருமித நோக்கும் கொண்டு பேரணி நடத்திக் காட்டியுள்ளோம் கோவை குலுங்கிட! கோட்டைக் கோணங் கிகள் நடுங்கிட!

மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில் பேசியோர் எப்படி யெல்லாம் கருத்து மழை பொழிந்து என்னைக் களிப்பில் ஆழ்த்தினர் தெரியுமா?

தலைப்புகளில் பேசியோர் இருக்கட்டும்: அவர்கள் ஏற்க னவே சொல்லேருழவர்கள்! தமிழகத்தின் திக்கெட்டும் முழங் குகிற கொள்கை விளக்க முரசங்கள்! வேல்கள், ஈட்டிகள், போர் வாட்கள் என உரை வீச்சு படைத்த முன்னணி உடன்பிறப்புக்கள்!

மாநாட்டுத் தலைவரை வழிமொழிந்த மாவட்டச் செயலா ளர்கள் ஒரிரு வாக்கியங்களை மட்டுமே கூறி என் மீதுள்ள வாஞ்சையையும் - கழகம் காத்திடும அந்தச் சேனா நாயகர்க ளின் மீது நான் கொண்டுள்ள பாசத்தையும் - அந்த மாநாட்டுப் பந்தலில் மலர்களாக்கித் தூவினார்களே; அந்த மலர்க் குவியல் முழுமைக்கும் சொந்தக்காரர்கள் என் ஆசான் பெரியாரும், என்னை ஆளாக்கிய அண்ணாவும் என்பதை மறந்து விடக்கூ டிய மமதையாளனல்லவே நான்!

வழிமொழிந்த மாவட்டச் செயலாளர்கள் பொழிந்த அந்த உரிமை கொண்டாடும் வாசகங்கள் ஏடுகளில் வராத காரணத் தால்; இதோ - என் நெஞ்சம் இனிக்க இனிக்க உனக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்டுகிறேன்.

முதலில் முன்மொழிந்த கண்ணப்பன் சி.டி. தண்டபாணி, கோவை. இராமநாதன், க.ரா. சுப்பையன் ஆகியோர் ''இவர் எங்கள் கோவை மாவட்டத்திலே 1945 ஆம் ஆண்டு வாக்கிலே வாழ்ந்தவர். பல ஊர்களுக்கு நடந்து சென்றே கழகப் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்த கொண்டவர்'' என்றனர்.

தொடர்ந்து வழிமொழிந்திட வந்த செங்கை அண்ணா தெற்கு மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம் ''இவர் அண்ணாவின் தம்பி கழகத்தின் இரண்டாம் அத்தியாயத்தை இவர் எழுதுவார் என்று அண்ணா அவர்களால் அடையாளம்

காட்டப்பட்டவர்'' எனக்குறிப்பிட; அவரோடு சேர்ந்து செங்கை அண்ணா வடக்கு மாவட்டச் செயலாளர் வேணுவும் ''எனவே இவருக்கு எங்கள் மாவட்டம்தான் சொந்தம்'' என்றார்.

பெரியார் மாவட்டச் செயலாளர் கணேச மூர்த்தியோ; ''இவர் ஈரோட்டில் பெரியார் வீட்டிலும் குடியரசு அலுவலகத் திலும் தங்கி பெரியாருக்கு மாணவராக விளங்கியவர். எனவே எமக்கே அதிக சொந்தம்'' என்றார்.

சேலம் வடக்கு மாவட்டச் செயலாளர் வீரபாண்டி ஆறுமு கமோ; ''இவர் சேலத்திலே நீண்ட காலம் தங்கி, கழகப் பணியாற்றிதோடு திரையுலகில் திருப்புமுனை ஏற்படுத்திய மந்திரி குமாரி'யை எழுதி கலைப்பணி ஆற்றியவர்; எனவே எமக்கே அதிக உரிமை'' என்றார்.

''நாமக்கல் கவிஞருக்கு மாளிகை அமைத்தவர் எனவே சேலம் தெற்கு மாவட்டமும் உரிமை கொண்டாடுகிறது'' என்றார் அந்த மாவட்டச் செயலாளர் வீரப்பன்.

''கல்லக்குடியில் தண்டவாளத்தில் தலை வைத்துப்படுத் துப் போராடியதும் - ஆறுமாதம் திருச்சி சிறையில் இருந்ததும் - முதன் முதலாக் தேர்தலில் 1957-ல் குளித்தலைத் தொகுதியில் நின்றதும் எங்கள் திருச்சி மாவட்டத்தில்தான்'' என்றார் அந்த மாவட்டச் செயலாளர் செல்வராசு!

கல்லக்குடி போராட்டத்தின்போது ''இவருக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை அளித்து சப்ஜெயிலிலும் பூட்டி வைத்தது எங்கள் அரியலூரில் தான்'' என்று உரிமைக்குரல் கொடுத்தார், அரியலூர் மாவட்டச் செயலாளர் சிவசுப்ரமணி யம்.

''இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தில் சிறைப்பட்டு எங்கள் மதுரைச்சிறையில் இவர் இருந்தார் - இவரது களம்புகு

காதைகளுக்கு; மதுரையே வழி அனுப்பும் பாடி வீடு'' என்றார் அந்த மாவட்டச் செயலாளர் பொன் முத்து இராம லிங்கம்!

''புதுக்கோட்டை என்ற புதிய மாவட்டத்தை உருவாக்கித் தந்தவர் இவர் என்பதால் எமக்கும் உரிமையுடையவர்'' என்றார் அந்த மாவட்டச் செயலாளர் பெரியண்ணன்!

தென் ஆர்க்காடு வடக்கு தெற்கு மாவட்டச் செயலாளர்க ளான செஞ்சி இராமச்சந்திரனும் பன்னீர்செல்வமும் எங்கள் மாவட்டத்தில்தான் இவர் பெண் எடுத்தவர் எனக்கூறி மற்ற மாவட்டங்களுடன் போட்டி போட்டனர்!

காமராசருக்கு நினைவிடம் அமைத்த காமராசர் பிறந்த வீட்டை நினைவகமாகவும் ஆக்கியவர்! காமராசரின் அன் பைப் பெற்ற இவர் விருதுநகரைத் தலைநகராகத் கொண்ட காமராஜர் மாவட்டத்துக்கு உறவுடையவர் என்றார் தங்கபாண் டியன்!

பசும்பொன் மாவட்டத்துப் பெருவீரன் ''வாளுக்கு வேலி'' கதையை ''தென்பாண்டிச் சிங்கம்'' என்ற புதினமாக எழுதிய இவர் எங்கள் மாவட்டத்துக்குச் சொந்தக்காரர் என்றார் தா. கிருட்டிணன்!

முகவை மாவட்டத்துக்குப் பல சிறப்புகள் உண்டு; அதில் ஒரு சிறப்பு அந்தப் பெயரில் ''மு.க.'' என்று இரு எழுத்துக் கள் இருப்பதே - அதனால் எங்கள் மாவட்டம் அவரை உள்ளடக்கியது என்றார் சுப. தங்கவேலன்!

மொழிப் புரட்சியின்போது தனிமைச் சிறையில் இவர் அடைக்கப்பட்டு; அண்ணா அவர்களால் ''யாத்திரை ஸ்தலம்'' என வர்ணிக்கப்பட்ட பாளையங்கோட்டை எங்கள் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில்தானிருக்கிறது எனத் தோள் உயர்த்தினார் டி.ஏ.கே. இலக்குமணன்!

கட்டபொம்மனுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை கட்டி, சிதம்பரனார் இழுத்த செக்கை சென்னையில் காட்சிக்கு வைத்தவர் இவர் என்பதால் இவர் எமக்கே உரியவர் என்று அறை கூவல் விடுத்தார் என். பெரியசாமி!

குமரி முனையில் வள்ளுவர் சிலை வைத்திடத் திட்டமிட் டுப்பணி தொடங்கியவர் இவர் என்பதால் எமக்கே உரியவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் இரத்தினராஜ்!

இந்தியாவிலேயே ''அம்பேத்கார்'' பெயரை ஒரு மாவட் டத்துக்குச் சூட்டியவர் இவரே; அதனால் இவர் எமக்குத்தான் உரியவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் முகமது சகி!

தமிழக அரசியலில் திருப்புமுனை ஏற்படுத்திய திருவண் ணாமலை இடைத்தேர்தல் 1962-ல் நடந்த போது ப.உ.ச. வெற்றிக்காக ஒருமாதம் திருவண்ணாமலையில் இருந்து பணியாற்றியவர் இவர் என்பதால் எமக்கே உரியவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் கு. பிச்சாண்டி!

முல்லை வேந்தன்; தர்மபுரியெனும் தகடூரின் அதியமானை யும் ஔவையையும் நினைவுபடுத்தி அந்த மாவட்டம் தங்க நெல்லிக்கனி பரிசளித்ததை சுட்டிக்காட்டி சொந்தம் கொண் டாடினார்!

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் அமைந்ததை இ. பெரியசாமி எடுத்துக்காட்டி; அதனால் ஏற்படும் நெருக் கத்தை உணர்த்தினார்!

கரூர் சிறையில் ஒரு நாள் - இந்தி எதிர்ப்புப் போரின் மற்றொரு கட்டத்தில் இவர் அடைபட்டிருந்தார் எனக்கூறி அந்த மாவட்டச் செயலாளர் பரமத்தி சண்முகம் உறவுக்கு வலிவேற்றினார்.

அண்ணா அறிவாலயம் இவர் அமைத்திட்ட தென் சென் னையில்தான் இவர் குடியிருக்கிறார்; அங்குள்ள சைதாப்பேட்

டையில் வென்றுதான் அமைச்சரானார் என்று வரலாற்றை எடுத்துரைத்தார் சைதை கிட்டு!

பலராமன் நன்கொடை சீட்டு விற்கும் இடத்தில் பணியாற்றியதால் அவருக்கு பதிலாக என்.வி.என்.சோழு வழிமொழிந்து; இவர் இப்போது புதுப்பித்துள்ள அறிவகம் இருப்பதும் இவர் நின்று வென்ற துறைமுகத் தொகுதியும் வடசென்னையில்தான் என்று உறவை விவரித்தார்!

1962 தேர்தலில் 15-ல் 14 எம்.எல்.ஏக்களும் வெற்றியடையாத போது தஞ்சையில் வென்றவர் இவர் என்றும் - விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்ட - தஞ்சைக் சிறையில் இருந்தவர் என்றும் - கலைஞரையும் பேராசிரியரையும் தந்தது எங்கள் மாவட்டமே என்றும் மேலத்தஞ்சை மாவட்டச் செயலாளர் கோ.சி. மணி உரிமையும் உறவும் பற்றி விளக்கினார்.

கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர் மீனாட்சி சுந்தரமோ இவர் பிறந்த திருக்குவளை கிராமமே எமது மாவட்டம்தான் என்றும் - இந்தியை எதிர்த்து இளம்வயதில் கொடி பிடித்தது அந்த மாவட்டத்தில் உள்ள திருவாரூரில்தான் என்றும் குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

புதுவை மாநில அமைப்பாளர் டி.இராமச்சந்திரன் ''இவர் 1944-ல் எங்கள் பாண்டிச்சேரியில் உயிருக்கே ஆபத்தான நிலையில் எதிரிகளால் தாக்கப்பட்டு தந்தை பெரியாரின் கரத்தினால் மருந்து போடப்பட்டது'' என்று பெருமை பொங்கக் கூறினார்.

பம்பாய் பொற்கோ; பம்பாயில் அடிபட்ட தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிய கழகத்தின் தலைவர் எனக் கூறிக் கண் கலங்கினார்.

அம்மையார் சத்தியவாணிமுத்து ''இவர் எங்களுக்கு சம்பந்தி'' என்று சொல்லிப் பூரிப்படைந்தார்!

நீலகிரி மாவட்டச் செயலாளர் முபாரக் என்ன சொன்னார் தெரியுமா? ''நான் இயற்கை வளம் கொஞ்சும் நீலகிரியிலி ருந்து வந்துள்ளேன். மற்ற மாவட்டச் செயலாளர்கள் உறவு கொண்டாடியதெல்லாம் செயற்கையானது - இவர் இயற்கை யிலேயே தலைவர் என்பதால் இயற்கை வளம் கொழிக்கும் எனது மாவட்டத்தின் சார்பில் வழி மொழிகிறேன்'' என்றார்!

உடன்பிறப்பே; முபராக் சொன்னது உண்மையா? அல்ல! அல்ல! நான் இயற்கையிலேயே தலைவனல்ல - ஆம்: தலைவனாகப் பிறந்தவனல்ல! அன்றும் இன்றும் என்றும் தொண்டன் தான்! உன் போன்ற உடன்பிறப்புகள் என்னை தலைவனாக்கித் தொண்டு செய்திட ஆணையிட்டுள்ளீர்கள்! அதுதான் உண்மை! உண்மை! உண்மை!

கோவை மாநாடு; இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடல்லவா? அதனால் ஒன்று சொல்கிறேன். 14-வது வயதில் நான் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கொடி ஏந்தியவன்! இன்று நீ ஏந்துகிறாய்! என் மகன் அந்தக் கொடி ஏந்துகிறான்! எல்.ஜி. நடத்தும் ''இலட்சியப்பாதை'' இதழில் ஒரு பெட்டிச் செய்தி இந்த வாரம் வந்துள்ளது; படித்திருப்பாய்; துரைமுருகனும் இரகு மான்கானும் மாநாட்டில் பேசியதையும் கேட்டிருப்பாய்!

அது என்ன தெரியுமா? ஸ்டாலினுடைய தாயாருக்குத் தாயாரின் தாயார் - அதாவது ''கொள்ளுப்பாட்டி'' இந்தி எதிர்ப்புப் போரில் 13.3.1939 அன்று சென்னையில் சிறைப் பட்டு மூன்றுமாதம் வேலூர் சிறையில் இருந்தவர்! பெயர் மாயவரம் இராஜாமணி அம்மாள்!

32 குழந்தைகளுடன் 73 தாய்மார்கள் 1938-ல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றனர். அவர்களில் இந்தக் கொள்ளுப்பாட்டி இராஜாமணி அம்மையாரும் ஒருவர்!

அன்று மா.இளஞ்செழியன் எழுதிய ''தழிழன் தொடுத்த போர்'' - இன்று வை. கோபால்சாமி எழுதியுள்ள ''போர்க்க

ளத்தில்'' - ஆலடி அருணா எழுதியுள்ள ''இந்தி ஏகாதிபத்தியம்'' ஆகிய நூல்களைப் படித்தால் இதுபோன்ற பல விபரங்கள் கிடைக்கும் உனக்கு!

முரசொலிமாறன் தீட்டியுள்ள ''திராவிட இயக்க வரலாறு'' நமது இனப்போரின் கட்டங்களை விளக்குவது போல்; இவை மொழிப் போரின் கட்டங்களை விளக்கும்!

விளக்கம் பெற்றால் மட்டும் போதுமா? - ஏப்ரல்20 - அறப்போருக்கு வரிந்து கட்டிக் கொண்டு; நமது கொள்ளுப் பாட்டிகளும், கொள்ளுப்பாட்டன்களும் பிடித்த இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கொடியைத் தூக்கிக்கொண்டு களம்புக வேண்டாமா? தயார்தானா?

அன்புள்ள,

மு.க.

(முரசொலி 1-4-1993)

புறப்படட்டும்; புறநானூறு மகளிர் பட்டாளம்!

உடன்பிறப்பே,

மலர்முகத்தம்மை - மங்கையர்க்கரசி - நச்சினார்க்கினியன் - ஞானம் அம்மையார் - தமிழரசி - கலைமகளம்மை - அங்கயற்கண்ணி - இளங்கோ - கண்ணம்மா - முத்தம்மா - ஆலங்காட்டான் - சிறையஞ்சான் - மருதம்மாள் - மலர்க்கொடி அம்மையார் - மறைக்காடன் - தமிழன்னை

இந்தப் பதினாறு பெயர்களையும் படித்தாயா? ஐம்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து 73 மகளிரும், 32 மழலைகளும் சிறைசென்று மூன்று மாதம் ஆறுமாதமெனத் தண்டனை அனுபவித்தார்களே; அவர்களிலே சில தாய்மார்களுக்கும், அவர்கள் பெற்றெடுத்த தங்கங்களுக்கும் அப்போதே சூட்டப்பட்டிருந்த தமிழ்ப் பெயர்கள்தான் இவைகள்!

கோவை இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநில மாநாட்டிலே ''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று டாக்டர் காளிமுத்து உரையாற்றி உருக்கிட; டாக்டர் தமிழ்க்குடிமகனும், டாக்டர் நன்னனும் தமிழர்க்குப் பெயர்களும் - கடைவீதிப் பலகைகளின் பெயர்களும் கூட வடமொழி எழுத்தில், ஆங்கில எழுத்தில், இந்தி எழுத்தில் தானே இருக்கின்றன என ஏங்கிட; ''என்று வரும்? அந்தப் பொற்காலம்?'' என எண்ணினோமே - அந்தக் காலம் 1938க்கு முன்பே விரிகதிர் பரப்பி வீறு கொண்டு நின்றிருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டே நான் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பதினாறு பெயர்களும்; இன்னும் சிலவும்!

ஆம்; மொழிப் போரில் சிறை சென்ற மகளிர் படை வரிசையில் மலர் மணமாய்க் கமழும் தமிழ்ப் பெயர்கள்! ஒருவேளை இவைதான் பதினாறு பேறுகளோ? உண்மைதான் தமிழர்க்கு இவைதானே பேறுகள்!

காஞ்சி மணிமொழியாரின் செல்வன் இளஞ்செழியன் எழுதிய ''தமிழன் தொடுத்த போர்'' எனும் நூலினை வாலிப வயதில் படித்துள்ளேன். இப்போது நமது அண்ணா அறிவாலயத்து நூல் நிலையத்திலிருந்து எடுத்துச் சென்று கோவை மாநாட்டிலிருந்து திரும்பும் போது ரயிலிலேயே படித்துக் கொண்டு வந்தேன். அதன் விளைவுதான் நேற்றைக்கு நான் எழுதிய ''கொள்ளுப் பாட்டியும் பாட்டனும் தூக்கிய கொடி'' என்ற கடிதம்!

அந்தப் பட்டியலைப் பார்த்தால் எத்தனை புலவர்கள் - எத்தனை ஆன்றோர், அறிஞர் பெருமக்களின் வீட்டுப் பெண்கள் மொழிப்போரில் ஈடுபட்டு சிறையேகினர் என்ற செய்தி, நம் சிந்தை அணுஒவ்வொன்றையும் சிலிர்த்திட வன்றேர் வைக்கின்றது!

காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு தலை சிறந்த சமூக சேவகியாக விளங்கிய மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாரை திராவிட இயக்கம் கவர்ந்தது! இந்தியை வீழ்த்த எழுந்த தமிழியக்கத்தின் படை வரிசைக்குத் தலைவியானார்! அவரும் மகளிர் குல திலகம் டாக்டர் தர்மாம்பாள் அம்மையாரும் -

''கருணையினு மிலையோ காங்கிரசாரே! கதறும்
பலன் தொல்லையோ? செந்தமிழ்த்தாயவள்
சிந்திடும் கண்ணீரால் தேசமே பாழாகுமன்றோ!''

எனக் கவிதையிலே முழங்கிய பாவலரின் துணைவியார் பட்டம்மாள் பாலசுந்தரமும் - புலவர் அருணகிரி நாதரின் துணைவியாரும் - காங்கிரசிலிருந்து வெளியேறி மொழிப் போரில் கலந்து கொண்ட என்.வி.என். அவர்களின் துணைவியார் புவனேசுவரியும் - பிரபல டாக்டர் சிற்சபையின் துணைவியார் கலைமகளம்மையும் - பெல்லாரி திவான்பகதூர் கோபாலசாமி முதலியாரின் சகோதரி ராசம்மாளும் - வேலூர் துளசிபாய் என்ற பார்ப்பன அம்மையாரும் - தமிழ்க் கடல் மறைமலை அடிகளாரின் இளைய மருமகள் ஞானம் அம்மையாரும் - அடிகளாரின் மூத்த மருமகள் சரோசினி அம்மையாரும் - புரட்சிக் கவிஞருக்குப் பொற்கிழி அளித்தி

டப் பெருமுயற்சி எடுத்திட்ட திருவாரூர் டி.என். இராமன் எனும் சுயமரியாதை வீரரின் தாயார் இராசம்மாளும் - திருவாரூர் சுயமரியாதைச் சங்கத்தலைவர் நாத்திக முத்துக்குமரனின் தாயார் (நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்ட மு.க.ஸ்டாலினின் கொள்ளுப்பாட்டி) இராஜாமணி அம்மாளும் - சிறையில் உயிர்நீத்த தியாகச் சுடர் தாளமுத்துவின் துணைவியார் குருவம்மாளும் - நெல்லைத் தமிழப் புலவர் இராமநாதனின் துணைவியார் பொன்னம்மாளும் - மொழிப் போரில் முதன் முதலாகச் சிறையேகிய பல்லடம் பொன்னுசாமியின் துணைவியார் நாச்சியம்மாளும் - சிறைத் தண்டனை பெற்ற 73 மகளிர் அணியில் அடங்குவர்.

பெரிய குடும்பத்தினர், நடுத்தரக் குடும்பத்தினர், அறிஞர்கள், புலவர்கள், டாக்டர்களின் குடும்பத்தினர் - மற்றும் தமிழ்ப்பற்று மிக்க தாய்க்குலத்தினர்; தாங்கள் தங்கள் தோளிலும் மடியிலும் குழந்தைகளையும் சுமந்தவாறு சிறை சென்ற போது - அந்தக்காலத்து இந்தி ஆதரவாளர்கள் என்ன கேவலமாகக் கேலி பேசினர் தெரியுமா? பெற்ற குழந்தைகளுக்குப் பால் வாங்கிக்கொடுக்க வக்கில்லை. வகையில்லை ஆகவே சிறைக்குச் சென்றுள்ளனர் என நாக்கில் நாராசத்தை நடமாடவிட்டனர்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது; அப்போது ஓர் ஆங்கிலோ இந்தியரை ஆசிரியராகக் கொண்டு ''தமிழ்மணி'' என ஒரு காங்கிரஸ் ஏடு நடந்தது.

''ஆயிரத்து ஒன்று ஹம்பக்'' எனத் தலைப்பிட்டு 1001 பேர் இந்தியை எதிர்த்துச்சிறை சென்றதைக் கிண்டல் புரிந்து முதல் பக்கத்தில் கட்டுரை தீட்டி - தமிழர் இயக்கத்தை நையாண்டி செய்தது!

அந்தக் கால கட்டத்தில் இந்தியா முழுவதும் விடுதலைப் போருக்காக தனி நபர் சத்தியாக்கிரகத்திலே பங்கேற்றுச்சிறை சென்ற காங்கிரசார் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 1001 பேர் தமிழ்மொழி காத்திட மறியல் நடத்தி சிறை புகுந்த எண்ணிக்கை ஒன்றும் குறைவானதல்ல!

1938-க்குப் பிறகு அடுத்தடுத்து நடைபெற்ற போராட்டங்களிலே அந்த எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்து உயர்ந்து - 1965-ல் மொழிப் புரட்சியே நடைபெற்று ஆயிரக்கணக்கானோர் மாண்டு மடிந்து - சிறையில் பல்லாயிரவர் அடைக்கப்பட்டு - 1986-ல் இந்தியை எதிர்த்து அரசியல் சட்டம் கொளுத்திச் சிறை சென்றோர் மட்டும் இருபதாயிரத்தை எட்டுகிற அளவுக்கு ஆயிற்று!

இப்போது மீண்டும் மொழிப்போர்க்களம் அமைகிறது!

தமிழகமெங்கும் இந்தி எழுத்துக்கள் அழிக்கப்படும் தொடர் போராட்டம் தொடங்கிவிட்டது!

ஏப்ரல் 20 ஆம் நாள் ''இரயில் நிறுத்தப் போராட்டம்''—

தமிழ் காக்க - இந்தி ஆதிக்கத்

தருக்கு அடக்கிட - கழகம்

களத்தில் குதிக்கும் நாள்!

இந்த நேரத்தில் இளைஞர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, விவசாய அணியினர்க்கு அழைப்பு விடுப்பது போலவே;

மகளிர் அணியினர்க்கும்

1938 ஆம் ஆண்டு அறப்போர் பட்டியலையும் அந்த படை வரிசையையும் நினைவூட்டி அழைப்பு விடுக்கின்றேன்.

புறப்படட்டும்;

புறநானூற்று மகளிர் பட்டாளம்!

அன்புள்ள,

மு.க.

(முரசொலி 2-4-1993)

